Registerde as a Newspaper பக்கங்கள் 16 விலை: ரூபா 5-00

NATIONAL LIBRARY SECTION,
MUNICIPAL LIBRARY SERVICES.

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 18 (03 - 11 - 1993) புதன்கிழமை ஓசை 358

## வெளிநாட்டில் வாழும் அங்கத்தவரை குடும்ப அட்டையில் பதிவு செய்க

அண்மைக்காலத்தில் குடும்ப அட்டைப் பதிவு பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின்போது சில குடும்பத்தினர், வெளிநாடுகளில் உள்ள தமது மணமாகாத அங்கத்தவர்களை குடும்பப் பதிவு அடையில் பதியாமல்விட்டது. கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதனால் ஏற்படக்கூடிய வீண்சிரமங்களை கருத்திற் கொண்டு சகல குடும்பத்தினரும் தத்தமது அட்டைகளைச் சரிபார்த்து வடபகுதிக்கு வெளியே வசிக்கும் உறுப்பினர்களின் பெயரை தவறுதலாக விடுபட்டு இருப்பின் சேர்த்துக்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருமணமான குடும்பத்தினர் சிலர் இதுவரை தமக்கென தனியான குடும்பப் பதிவு அட்டை பெற விண்ணப்பிக்காதுள்ளனர். குடும்பப் பதிவு அட்டையின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு சகல குடும்பத்தினரும் தமக்கென தனியான குடும்பப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அரசு உதவும் ஆயுத குழுக்களிடம் சட்டவிரோத சிறைச்சாலைகள்

## மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சிறிலங்காவில் அரசின் ஆதரவுடன் இயங்கிவரும் ஆயுதக்குழுக்கள் சட்டவிரோதமான பல சிறைக்கூடங்களையும், சித்திரவதை முகாம்களையும் வைத்திருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இவற்றில் சில அண்மைக் காலங்களில் கூட ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அது குற்றம்சாட்டியுள்ளது.**

சட்டபூர்வமற்ற முறையில் இயங்கும் சில அமைப்புக்களின் சட்டபூர்வமற்ற பல சிறை கூடங்கள் சிறிலங்காவின் பல பகுதிகளில் இன்னும் செயல்படுவதாக தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாக மனித உரிமை நிறுவனம் மற்றும் சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளன.

இவற்றின் சில அண்மை காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இன்னும் சில பல காலமாக இயங்கி வருவதாகவும் தற்போது கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது கிடைத்த தகவல்களை மையமாக வைத்து இச்சிறை கூடங்கள் வவுனியா, மட்டக்களப்பு, தினியாட்ட கந்திய, பதுளை, தெமோதர ஆகிய பகுதிகளில் செயல்பட்டுவருவதாகவும், மேலும் சில நடமாடும் வதைமுகாமாக செயல்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

தனிப்பட்ட கொலைக் கும்பலினால் நடைபெறும் இவ் வதை முகாம்களில் தமிழ் இளைஞர்களும், தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது இவை சட்ட பூர்வமற்ற நடவடிக்கை என்றும் இது தொடர்பாக தகவல் பெறமுயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சட்ட பூர்வமற்ற குழுக்களினால்நடாத்தப் பட்டுவரும் ஆள் கடத்தல் மற்றும் கொலை குறித்த புகார்களை விசாரிக்குமாறு டி. பி விஜேதுங்க பணித்துள்ளதாக கூறபபடுகிறது

தென்பகுதியில் படையினரால்

## கடத்தப்பட்டோர் குறித்து பிரதமர் கைவிரிப்பு

(கண்டி)

1989 இல் சிறிலங்கா படையினரால் கடத்திச் செல்லப்பட்ட தனதுகணவனைப்பற்றியும் மூன்று பெண் பிள்ளைகளைப் பற்றியும் விபரம் அறிய சென்ற பெண் ஒருவர் அவர்கள் படையினரால் கடத்திச் செல்லப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்ததை அறிந்து கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் மயக்கமுற்று விழுந்தார்.

இவருடைய மூன்று மகள்மாரையும் கணவரையும் பாதுகாப்புப் படையினர் பிடித்துச் செல்லவில்லை என்ற பிரதமரின் அறிவித்தலை வாசித்துக் காட்டியபோதே இந்தப்பெண் மயக்கமுற்றார்.

வத்தேகமகுண்டசாலையில் செப்ரெம்பர் 1989 - இல் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டதாகச்சொல்லப் படும் ஐம்பது பேரின் விபரம் அறிய பெருமளவில் பெற்றோரும் உறவினர்களும் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில் கூடியிருந்தனர் குறிப்பிட்ட தாயாரும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்.

கண்டி மாவட்ட உறுப்பினர் கண்டியில் காணாமல் போனவர்கள் பற்றிப் பிரதமரிடம் கேட்ட கேள்விகளுக்கு பிரதமர் அளித்த பதிலைக் ஹான்சாட்டிலிருந்து வாசித்துக் காட்டிய போதே இந்தச்சம்பவம் நடைபெற்றது காணாமற் போன மற்றப் பிள்ளைகளின் பெற்றோர் கதறி அழுதனர்.

செப்ரெம்பர் 11, 1989இல் மூன்று மகள்களையும் தந்தையையும் இராணுவம்பிடித்துச் செல்லவில்லை என்றும் மற்ற ஐம்பது பேரையும் இராணுவம் கைதுசெய்யவில்லை என்றும் ஹான்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாராயப் போத்தலில் கண்டிய நடனம்

தென்னிலங்கையில் விற்பனையாகும் ஒரு ரக தென்னஞ் சாராயப் போத்தல்களில் பொறிக்கப் பட்டிருக்கும் ''வெஸ் நடனக்காரரின்'' படத்தை அகற்றும்படி கண்டி தலதா மாளிகை தியவதன நிலமை நிரஞ்சன் விஜேரெட்ன கலாசார அமைச்சை கேட்டுள்ளார்.

சாராயப் போத்தல் பெட்டியில் பொறிக்கப் பட்டிருக்கும் 'வெஸ் நடனக்காரர் பௌத்தரின் சமய மற்றும் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்று என்று அவர் கலாசார அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அநுரா ஆதரவாளர்கள் வெளியேற தடையில்லை

### சிறிமாவோ அறிவிப்பு

[கொழும்பு]

சுதந்திரக்கட்சியில் உள்ள அநுரா பண்டாரநாயக்கா ஆதரவாளர்கள் பழிவாங்கப் படமாட்டார்கள் எனவும், கட்சியை விட்டு வெளியேற உறுப்பினர்கள் பழிவாங்கப்படுவர் என யாரும் அஞ்சவேண்டியதில்லை. ஆனால் சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு முரணாக யாராவது ஐ.தே. க. கொள்கைகள்தான் சிறந்

## அடுத்த பல்கலை அனுமதி புதியமுறையில் நடைபெறும்

### மக்கள் அபிப்பிராயம் பெறமுயற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில்மாணவர்களை சேர்த்து கொள்வது கலைக்கழகங்களுக்குமாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக தற்போது இருக்கும் 1993 க பொ த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்க

## வீதிப்போக்குவரத்துக்கு ஒத்துழைக்க கோரிக்கை

வீதியில் துவிச்சக்கர வண்டியில் செல்பவர்கள் வீதிப் போக்குவரத்து விதிகளை நடை முறைப்படுத்த ஒத்துழைக்குமாறு தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் வேண்டியுள்ளார்.

அவர் விடுத்த வேண்டுகோளில் கடந்தமூன்றாண்டு காலமாக சிறிலங்கா அரசு எம் மக்களை அழித்தொழிக்கும்நோக்கில் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அடங்கலாக பாரிய பொருளாதார தடையை எமது மக்கள் மீது திணித்துள்ளது இதனால் எமது பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டிகளின் பாவனை அதிகரித்துள்ளது இதனால் வீதிகளில் எம் மக்கள் பயணம் செய்யும்போது பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது.

இவ்வாறு துவிச்சக்கரவண்டியில் செல்லும் போது பக்கம்

[6ஆம் பக்கம் பார்க்க]

## பருத்தித்துறையிலிருந்து வாதுவ' விற்கு குடிநீர்

(வடமராட்சி)

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''வாதுவ'' கப்பலில் குடிநீர் தீர்ந்து விட்டதினால் கரைப்பகுதியிலிருந்து இரண்டு பவுசர் குடிநீர் கப்பலுக்கு எடுத்துச் சென்று வழங்கப்பட்டது. இதனையடுத்து தொடர்ந்தும் இக் கப்பல் பொருள்களை இறக்கி வருகிறது.

யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ பத்மநாதன் அவர்களின் ஏற்பாட்டினையடுத்து பருத்தித்துறையில் இயங்கி வரும் புனாவாழ்வு அலுவலகம் மூலம் குடிநீர் எடுத்துச் சென்று வழங்கப்பட்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## நாளை படகுச்சேவை

இளாலி-பூநகரி படகுச் சேவை நாளையும் எதிர்வரும் 6-ம் திகதியும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மட்டு. மாவட்டம் 6 மாதத்தில்

## சாராயப் போத்தலில் கண்டிய நடனம்

தென்னிலங்கையில் விற்பனையாகும் ஒரு ரக தென்னஞ் சாராயப் போத்தல்களில் பொறிக்கப்பட்டிருக்கும் ''வெஸ் நடனக்காரரின்'' படத்தை அகற்றும்படி கண்டி தலதா மாளிகை தியவதன நிலமை நிரஞ்சன் விஜெரெட்ன கலாசார அமைச்சை கேட்டுள்ளார்.

சாராயப் போத்தல் பெட்டியில் பொறிக்கப் பட்டிருக்கும் 'வெஸ் நடனக்காரர் பௌத்தரின் சமய மற்றும் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்று என்று அவர் கலாசார அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## அநுரா ஆதரவாளர்கள் வெளியேற தடையில்லை

### சிறிமாவோ அறிவிப்பு

[கொழும்பு]

சுதந்திரக்கட்சியில் உள்ள அநுரா பண்டாரநாயக்கா ஆதரவாளர்கள் பழிவாங்கப் படமாட்டார்கள் எனவும், கட்சியை விட்டு வெளியேற விரும்பினால்கூட அதற்கு தடை இல்லை எனவும் கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

எமது கட்சியிலிருந்து வெளியேறிய அநுரா ஐ.தே.கவில் சேர்ந்துள்ளதால் அவரின் ஆதரவாளர்களான எம்கட்சி உறுப்பினர்கள் பழிவாங்கப்படுவர் என யாரும் அஞ்சவேண்டியதில்லை. ஆனால் சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு முரணாக யாராவது ஐ.தே.க. கொள்கைகள்தான் சிறந்தது என தீர்மானித்து ஐ.தே.க.வில் சேர விரும்பின் அதற்கு நாம் தடையாக இருக்கப் போவதில்லை. அவர்கள் தங்கள் விருப்பம்போல வெளியேறலாம் அதற்கு தடையில்லை என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

...னும் செயல்படுவதாக தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாக மனித உரிமை நிறுவனம் மற்றும் சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளன.

இவற்றின் சில அண்மைமை காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இன்னும் சில பல காலமாக இயங்கி வருவதாகவும் தற்போது கிடைத்த ...கந்திய, பதுளை, தெமோதர ஆகிய பகுதிகளில் செயல்பட்டுவருவதாகவும், மேலும் சில நடமாடும் வதைமுகாமாக செயல்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

தனிப்பட்ட கொலைக் கும்பலினால் நடைபெறும் இவ் வதைமுகாம்களில் தமிழ் இளைஞர்களும், தமிழ் அரசி... ...கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சட்டபூர்வமற்ற குழுக்களினால்நடாத்தப் பட்டுவரும் ஆள் கடத்தல் மற்றும் கொலை குறித்த புகார்களை விசாரிக்குமாறு டி.பி விஜேதுங்க பணித்துள்ளதாக கூறபபடுகிறது

# அடுத்த பல்கலை அனுமதி புதியமுறையில் நடைபெறும்

## மக்கள் அபிப்பிராயம் பெறமுயற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில்மாணவர்களை சேர்த்து கொள்வது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயம் பெற புதிய நடவடிக்கையினை அமுல்படுத்த உயர்கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கென விசேட குழு அமைக்கவுள்ளதாக உயர் கல்வியமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார். பல்கலைக்கழகங்களுக்குமாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக தற்போது இருக்கும் முறையை மாற்றியமைத்து எல்லோருக்கும் ஒரே மாதிரியான முறை ஒன்று நடைமுறைப்படுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

1993 க பொ த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யும் போது புதிய நடைமுறையே கடைப்பிடிக்கப்படும் புதிதாக அமைக்கப்படும்குழுவில் ஐந்து புத்திஜீவிகள் அங்கம் வகிப்பர் குழு ஆறுமாதத்தினுள் அறிக்கையை சமர்ப்பிக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பருத்தித்துறையிலிருந்து வாதுவ' விற்கு குடிநீர்

(வடமராட்சி)

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''வாதுவ'' கப்பலில் குடிநீர் தீர்ந்து விட்டதினால் கரைப்பகுதியிலிருந்து இரண்டு பவுசர் குடிநீர் கப்பலுக்கு எடுத்துச் சென்று வழங்கப்பட்டது. இதனையடுத்து தொடர்ந்தும் இக் கப்பல் பொருள்களை இறக்கி வருகிறது.

யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ பத்மநாதன் அவர்களின் ஏற்பாட்டினையடுத்து பருத்தித்துறையில் இயங்கி வரும் புனாவாழ்வு அலுவலகம் மூலம் குடிநீர் எடுத்துச் சென்று வழங்கப்பட்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## நாளை படகுச்சேவை

இளாலி-பூநகரி படகுச் சேவை நாளையும் எதிர் வரும் 6-ம் திகதியும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மட்டு. மாவட்டம் 6மாதத்தில் அதிரடிப்படை வசமாம்

(மட்டக்களப்பு)

இன்னும் ஆறு மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முகாம் பாதுகாப்புகளுக்கென முழுமையாக விசேடஅதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்படுவர் என ஆரைப்பற்றை விசேட அதிரடிப்படைமுகாம்பொறுப்பதிகாரி எஸ். பத்திரான தெரிவித்துள்ளார்.

இப்போது மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட எல்லையிலிருந்து ஆரையம்பதி வரையுமே அதிரடிப் படையினர் வசம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடலொன்று இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது இதில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன. இதில் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களைத் கலந்து கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

## வரும் ஆண்டு முற்பகுதியில் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு

### தேர்தல்திணைக்களம் தயாராம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முற்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கான நடவடிக்கையில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுவருகின்றது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மிக விரைவில் வெளியிடப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக இந்த வாக்கெடுப்பு நடத்த அரசாங்கம் திட்டமிட்டு வருவதாகவும், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் எந்த நேரத்திலும் தேர்தல் நடத்தக் கூடிய நிலையில் இருக்குமாறு தேர்தல் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

## க.பொ.த. சாதாரண பரீட்சை டிசம்பர் 6இல் ஆரம்பம்

[கொழும்பு]

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்தமாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகும் இப்பரீட்சை தொடர்ந்து 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் துரித கதியில் நடைபெற்று வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

பனைமரங்கள் கூட நிமிர்ந்து நின்று
பகைவனுடன் போராடு ; பூமியிலே
நீ மட்டும் வளைந்து நிற்கின்றாயே
நிமிர்ந்து கொள்
விழிகள் நெருப்பாக வெளியேவா.

## மத்திய கிழக்கு நாடுகளில் ஒருலட்சம் வேலை வாய்ப்பு

[கொழும்பு]

அடுத்த வருட நடுப்பகுதியில் மேலும் ஒரு இலட்சம் இலங்கையர்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளன என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் அல் ஹாஜ் எம்.எல்.எம். அபூசாலி இதனைத் தெரிவித்துள்ளார். தற்போது 3,50,000 இலங்கையர்கள் மத்திய கிழக்கில் தொழில் புரிகின்றனர். இவர்கள் 2300 கோடி ரூபாவைச் சம்பாதித்துள்ளனர்.

இவ் வருட இறுதியளவில் 3000 கோடி ரூபா அந்நியச் செலாவணி கிடைக்கு மென்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஈராக், குவைத் யுத்தத்தினால் அழிவுற்ற பகுதிகளை மீண்டும் நிர்மாணம் செய்வதிலும் இலங்கையர்களின் உழைப்பு அவசியமாகுமென்றும் இது பற்றி ஆராய ஒரு குழுவையும் அமைச்சர் அபூசாலி நியமித்துள்ளார்.

## பொலிஸ் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்பட்டது

[கொழும்பு]

சிறிலங்கா பொலிஸ் துறையில் அண்மையில் செய்யப்பட்ட பதவி உயர்வுகள் குறித்து சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஏற்கனவே உள்ள விதிகளுக்கு முரணான வகையில் இது செயற்படுத்தப்பட்டதாகவும் உதவி அத்தியட்சகராக பதவி உயர்வு பெற ஆறுஆண்டு சேவை கட்டாயம்

(6 ஆம் பக்கம் பார்க்க )

# பிரச்சினையை மூடிமறைக்க ஜனாதிபதி முயற்சி

## எதிர்க்கட்சி எம்.பி.' தெரிவிப்பு

(கொழும்பு)

இன்று வடக்கு கிழக்கில் உள்ளது 'பயங்கரவாத' பிரச்சினை எனக் கூறி ஒரு தேசியப் பிரச்சினையை ஜனாதிபதி மழுங்கடிக்கப் பார்க்கிறார். இதன் மூலம் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் நிரந்தரப் பகைவராக்க அவர் முயல்கிறார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இன்று தேவைப்படுவது அரசியல் தீர்வுதான் ஏனெனில் வடக்கு கிழக்கு பிரச்சினை ஓர் இனத்தின் தேசியபிரச்சினையைமையமாக கொண்டுஉருவாகியது எனவே அந்த பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்றார்.

இலங்கையில் இரு இனங்கள் அன்று தொடக்கம் வாழ்ந்துவருகின்றனர் இவை இரண்டும் மொழி, கலை, கலாசாரம் மற்றும் சகல விதத்திலும் வேறுபட்டே வாழ்ந்து வருகின்றன எனவே இங்குள்ள ஒரு இனத்தின் ஆட்சி நடைபெறும் போது மற்றைய இனம் பாதிப்பு அடையும் இவ்வாறான பாதிப்பின் காரணமாகவே தமிழ் மக்கள் ஆயுதத்தை எடுத்தார்கள். இன்று இது பாரியளவில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது இதற்கு முக்கிய காரணம் இனவாத நோக்குடன் தமிழரின் பிரச்சினைகளை புறக்கணித்து வந்த அரசியல் வாதிகள்தான் ஆகவே இராணுவ நடவடிக்கை என்றும் வெற்றியீட்டப் போவதில்லை,

வடக்கு- கிழக்கு பிரச்சினையை யுத்தத்தினால் வெற்றி கொள்ள முடியாது இதே வேளை தேசிய பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்கின்றோம் என்பதை சகலரும் ஒத்துக்கொள்கின்றோம் ஒரு சில இனவாத குழுக்களும் ஜனாதிபதியும் மட்டுமே இதனை ஏற்றுக் கொள்ள கஷ்டப்படுகின்றார்கள்.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்பரப்பில் புலிகள் - படையினர் மோதல்

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 7 மணியவில் சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் சுமார் 15 நிமிடம் வரை நீடித்தது கடற்பரப்பில் ஷெல் சத்தமும் கலிபர் தாக்குதல் சத்தமும் சரமாரியாகக கேட்டவண்ணம் இருந்தன எனினும் சேதவிபரம் தெரியவில்லை. (86)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

28.10.93 அன்று அதிகாலை 4.00-500 மணிக்கு மிடையில் அடையாள அட்டை, கண்ணாடி, சிறு தொகைப்பணம், வைத்திய பரிசோதனை அட்டை அடங்கிய கைப்பை ஆனைக்கோட்டைக்கும் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சங்கானை தபாற்கந்தோரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6466)

### தேவை

தமிழ், ஆங்கில புதியபழைய தட்டச்சு இயந்திரம் உடன் தேவை. தொடர்பு: ஆர். மருதலிங்கம் 811, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (6469)

### காணவில்லை

28-10-93 அதிகாலை பொமரேனியன் பெண் நாய் (வெள்ளை கலந்த பிறவுண்) காணவில்லை. தயவு செய்து கண்டவர்கள் இல. 3, அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (6470)

### ஆயுர்வேத மருந்து விற்பனை

(கொழும்புத்துறை, வடமராட்சி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி சித்த ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம் ஒன்றை நெல்லியடியில் ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

### பெருமழையால் குளங்கள் நிரம்பின

(குருநகர்)

கடந்த ஒருவார காலமாக வடபகுதி எங்கும் பெருமழை இரவும், பகலும் மாறி மாறி பெய்து வருவதன் காரணமாக குளங்கள், குட்டைகள் மற்றும் கிணறுகள், கேணிகள் நிரம்பி வழியத் தொடங்கிவிட்டன.

வாய்க்கால்கள்மூலம் பாயும் வெள்ளம் வயல்களை மூடி நிற்கின்றன. இதனால் பயிர்கள் அழுகிப் பழுதடையும் நிலையும் தோன்றியுள்ளது.

வண்ணார்பண்ணை, நந்தாவில், சுன்னாகம், கந்தரோடை, பொம்மைவெளி, ஆனைக்

## ஜே.ஆரின் கூற்றுக்கு தொழிலதிபர் மறுப்பு

(கொழும்பு)

நான் ஒரு போதும் அரசியலில் ஈடுபட்டதில்லை அத்துடன் ஊம் சேர்ப்பதற்காக அரசியலை ஒருபோதும் பயன்படுத்தியதில்லை என்று பிரபல தொழிலதிபர் ஏ.வை.எம். ஞானம் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு கிறான் பாஸில் உள்ள தனது மூதாதையரின் விடுதனக்குத்தெரியாமலேயே ஒரு தமிழ்ப் பெருமனுக்கு விற்கப்பட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாகூறியிருப்பதாக முன்னணி பத்திரிகைகளின் சில செய்தி தொடர்பாக அப்பத்திரிகைகளுக்கு அளித்த விளக்க மொன்றிலேயே ஞானம் இதனைத் தெரிவித்தார்.

என்னை மிக நன்கு தெரிந்த ஆற்றல் மிக்க மனிதர் இத்தகையான கூற்றைக்கூறியிருப்பது எனக்கு அதிர்ச்சியை தருகிறது. கிராண்பாஸில் எந்தவொரு சொத்தையுமே நான் எவரிடமிருந்தும் கொள்வனவு செய்யவில்லை என்று அவர் மேலுங்குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஜே. ஆரின் கூற்றுப் பற்றி மேலும் பலவிபரங்களை வெளியிட்டுள்ளார்.

## மாவீரர்களுக்கு தென்மராட்சியில் மக்கள் பெருமளவில் அஞ்சலி

வெடி விபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் ஜாதவன், (சுப்பிரமணியம் இரத்தினகுமார் குச்சவெளி, திருமலை) கப்டன் அருண் [சிவிதம்பி அருமைத்துரை அம்பாறை] ஆகிய இரு மாவீரர்களினதும் வித்துடல்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமையன்று யாழ்- வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது- பெருந்திரளாக மக்கள் திரண்டு இம் மாவீரர்களுக்கு அஞ்சலிசெலுத்தினர்- அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது- அஞ்சலிஉரைகளைத் தொடர்ந்து மாவீரர்களின் வித்துடல்கள் பவனியாக எடுத்து வரப்பட்டு கப்டன் அருணின் வித்துடல் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில்விதைக்கப்பட்டது- கப்டன் ஜாதவனின் வித்துடல் திருமலைக்கு எடுத்துச் செல்லப் பட்டது- (86)

## களவாடப்பட்ட மோட்டார்சைக்கிள் மீட்பு

கடந்த 20.09.93 அன்று சாவகச்சேரி சிவன் கோவிலடி பகுதியில் வீடு ஒன்றில் விடப்பட்ட மோட்டார் சைக்கிள் திருடியவரிடமிருந்து மோட்டார்சைக்கிள் மீட்கப்பட்டது.

விடத்தல்பளையைச்சேர்ந்த இ. தம்பையா என்பவரது மோட்டார் சைக்கிளை திருடியவரிடம் இருந்து கடந்த திங்கள் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில்வைத்து தமிழீழ காவல்துறையினரால் மீட்கப் பட்டது. திருடியவர் காவல் துறையினரை கண்டவுடன் மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு மறைந்துவிட்டார். பின்பு காவல் துறையினர் மோட்டார் சைக்கிளை சாவகச்சேரி நீதிமன்றில் வைத்து உரியவரிடம் ஒப்படைத்தனர். (86)

## முதன்மை ஆசிரியர்கள் பாடங்களை மாற்றலாம்

முதன்மை ஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் விரும்பின் தமது பாடங்களை மாற்றிக் கொள்ளலாம். இதுவரை போன்று தற்போது அவர்கள் உள்ள கல்விக் கோட்டங்களை விட்டு புதியகல்விக் கோட்டங்களுக்கு மாறிச் செல்லலாம் என அண்மையில் யாழ். கல்வித்திணைக்களத்தில் விசேடபாடங்களைக் கற்பிக்கும் முதன்மை ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் யாழ்.பிரதேச கல்வித்திணைக்கள ஆசிரிய ஆலோசகர்களுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பட்டுள்ள முதன்மை ஆசிரியர்கள் குறைந்த பட்சம் மூப்பது பாடசாலைகளை தமது பரிவிதானத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்றும், வெற்றிடமுள்ள பாடங்களைக் கற்பிக்க உள்ள முதன்மை ஆசிரியர்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை விரைவில் யாழ். மாவட்டத்தில் நடாத்த ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுவருவதாகவும் யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் முதன்மை ஆசிரியப் பணியிலுள்ள ஆசிரியர்கள் வேலணை, யாழ்ப்பாண கல்

## ராஜினாமா கடிதங்கள் முன்கூட்டி பெறப்பட்டன?

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி தனது ஐக்கிய தேசிய கட்சி எம்பிக்களிடம் இருந்து தேதி குறிப்பிடாத ராஜினாமாக் கடிதங்களை கோரியிருந்தார் என்ற செய்தியை பாராளுமன்ற செயலாளர் மறுத்துள்ளார் எம், பிக்கள் ஜே. ஆரின் காலத்தில் பிரதம மந்திரியாக இருந்த காலஞ்சென்ற பிரேமதாசாவிடம் இதற்கு ஒப்புதல் தெரிவித்தனர் என்றும் இதன்பிரகாரம் தேதியிடப்படாத எம். பிக்களின் கடிதங்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் அனுப்பிவைக்கப்பட்டன என்றும் பத்திரிகையில் வெளியான செய்திகளுக்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

## ஒன்பது மாத விவசாயப் பயிற்சி திருநெல்வேலியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான ஒன்பது மாத கால விவசாயப்பயிற்சி நெறி அண்மையில் திருநெல்வேலி பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்படும் இப் பயிற்சி நெறியின் ஆரம்ப நாள் நிகழ்வுகளில் உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்), உதவி விவசாய பணிப்பாளர் (பயிற்சி), திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிநிலைய பொறுப்பதிகாரி, யாழ்ப்பாண விவசாய கல்லூரி அதிபர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழ். பல்கலைக் கழகத்தில் கணனிக்கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கணனிக் கல்வி நிலையங்களின் ஒத்துழைப்புடன் நடத்தும் கணனிக் கண்காட்சி யாழ். பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் 10ஆம் 11ஆம் 12ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

காலை 8.00மணி தொடக்கம் மாலை 6.00மணி வரை இக் கண்காட்சி நடைபெறும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் அறிவித்துள்ளது.


அதிர்ஷ்ட இலாபச்

## சீட்டிழுப்பு முடிவுகள்

ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ச. ச. நிலையம் கெருடாவில் தொண்டமானாறு 01-11-93 இல் நடைபெற்ற சீட்டிழுப்பின் முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1ஆம் பரிசு | இல. | 28 |
| 2ஆம் பரிசு | இல. | 109 |
| 3ஆம் பரிசு | இல | 03 |

ஆறுதல் பரிசுகள் இல. 314, 31, 615, 169, 186

பரிசுகளை 08-11-93 க்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகிகள்

[6468]

## எழிலக அதிர்ஷ்டசாலிகள்

ஒக்ரோபர் மாத சீட்டிழுப்பில் பரிசுபெறுவோர்.

1-ம் பரிசு:- திரு எஸ். கலைவாசன் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

ரூ.2500/-


## 1 - ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12 - 03 - 1960



அரக்கர் அழிப்பில் 14 - 11 - 1992

### கனகசுந்தரம் லிங்கேஸ்வரன் [ஈசன்]

திதி : 1993-11-08

அரக்கர்களின் வெறியாட்டத்திற்கு
அகப்பட்டு மாண்டாயே!
இரக்கமின்றி உன்னையவர்
இம்சைப்படுத்தி அழித்தனரே!
மறக்கத்தான் முடியுமா - நீ
மாண்ட கதையினை
உறக்கமின்றி உன்னைப் பெற்றவர்கள்
உடன் பிறப்பு, மனைவி, பிள்ளைகள்
கவலையில் மிதந்து கண்ணீரில் வாழ்வதை....?
உன் ஆத்மா சாந்தியடைய
ஆண்டிகேணி ஐயனாரை வேண்டுகிறோம்

உன்பிரிவால் துயருறும்
கருங்காலி, காரைநகர். அன்புப் பெற்றோர், சகோதரர், மனைவி, பிள்ளைகள்

(6464)

## நினைவு கூருகின்றோம்.. 1993- 11- 03

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,
**தம்பி** (கணபதிப்பிள்ளை ஜெயநாதன் - நாவற்குடா - மட்டு)

1987ஆம் ஆண்டு யாழ்-பொன்னாலைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**2-ம் லெப். சுகன்** (மாரி சக்திவேல் - வாமதேவபுரம், அடம்பன்-மன்னார்)

யாழ் - கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**ரூபி** (மாரியம்மா மாரிமுத்து-இலுப்பைக்கடவை - மன்னார்)

யாழ்-கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**சபரி** (ஹம்சா அத்துவிதானந்தன்-திருநெல்வேலிதெற்கு -யாழ்)

மட்டு-கல்லடிப்பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்,
யாழ்-உடுவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழர்கள்,
1988ஆம் ஆண்டு பாவற்கொடிசேனையில் இந்தியப் படையினர் சுட்டதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,
**லெப். ஜஸ்மின்** (அந்தோனி ஆரோக்கியநாதன்-வீச்சுக்கல் முனை, புதூர்-மட்டு))

யாழ்-சரசாலைப்பகுதியில் தேசவிரோதிகளால்சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான.
சுந்தரம்

ஒன்றை நெல்லியடியில் ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## பெருமழையால் குளங்கள் நிரம்பின

(குருநகர்)

கடந்த ஒருவார காலமாக வடபகுதி எங்கும் பெருமழை இரவும், பகலும் மாறி மாறிப் பெய்து வருவதன் காரணமாக குளங்கள், குட்டைகள் மற்றும் கிணறுகள், கேணிகள் நிரம்பி வழியத் தொடங்கி விட்டன-

வாய்க்கால்கள்மூலம் பாயும் வெள்ளம் வயல்களை மூடி நிற்கின்றன. இதனால் பயிர்கள் அழுகிப் பழுதடையும் நிலையும் தோன்றியுள்ளது.

வண்ணார்பண்ணை, நந்தாவில், சுன்னாகம், கந்தரோடை பொம்மைவெளி, ஆனைக்கோட்டை, நவாலி, சங்கரத்தை, அராலிப் பகுதிகளில் வேளாண்மை பெருமழை தொடர்ந்து பெய்து வருவதனால் பாதித்து விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்- (21)

## நாடகப் பயிலரங்கு

இருபாலை தமிழ் மாமன்றத்தினர் நாடகப் பயிலரங்கு ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றனர், இப் பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் எதிர்வரும் இருபதாம் திகதிக்கு முன்பாக தொடர்புகொள்ளுமாறு மன்றத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்,


## மகாபொல கொடுப்பனவு 1991/92

முதலாம் வருட மாணவர்களுக்கான 5-ம் தவணைப்பணமும், ஏனைய வருட மாணவர்கட்கான 10-ம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளுக்கான நேர சூசிகை பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

- பதிவாளர்

(சி-7828)


இ. தம்பையா என்பவரது மோட்டார் சைக்கிளை திருடியவரிடம் இருந்து கடந்த கிழமை யாழ்ப்பாணம் நாவ மோட்டார் சைக்கிளை சாவகச்சேரி நீதிமன்றில் வைத்து உரியவரிடம் ஒப்படைத்தனர். (86)

## முதன்மை ஆசிரியர்கள் பாடங்களை மாற்றலாம்

முதன்மை ஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் விரும்பின் தமது பாடங்களை மாற்றிக் கொள்ளலாம். அதே போன்று தற்போது அவர்கள் உள்ள கல்விக் கோட்டங்களை விட்டு புதியகல்விக் கோட்டங்களுக்கு மாறிச் செல்லலாம் என அண்மையில் யாழ். கல்வித்திணைக் களத்தில் விசேட பாடங்களைக் கற்பிக்கும் முதன்மை ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் யாழ். பிரதேச கல்வித்திணைக்கள ஆசிரிய ஆலோசகர்களுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும் விசேட பாடங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள முதன்மை ஆசிரியர்கள் குறைந்த பட்சம் முப்பது பாடசாலைகளை தமது பாட விதானத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்றும், வெற்றிடமுள்ள பாடங்களைக் கற்பிக்க உள்ள முதன்மை ஆசிரியர்களை நிரப்புவதற்கானபோட்டிப் பரீட்சை விரைவில் யாழ். மாவட்டத்தில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் முதன்மை ஆசிரியப் பணியிலுள்ள ஆசிரியர்கள் வேலணை, யாழ்ப்பாண கல்விக் கோட்டங்களுக்கு இணைந்து செயற்படுவார்கள் எனவும் யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (17)

## வன்னி, முல்லையில்கிளைகள் நிறுவ இந்துமதகுருமார் ஒன்றியம் ஏற்பாடு

வன்னி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இந்து மத குருமார் ஒன்றியத்தின் கிளைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக ஒன்றிய அமைப்பாளர் ஐ. கை. இராசேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஆறாம் திகதி சனிக்கிழமை காலை பத்துமணியளவில் நெடுங்கேணி கந்தசுவாமி கோவில் மண்டபத்திலும் பத்தாம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மண்டபத்திலும் இதற்கான ஆரம்பக் கூட்டங்கள் நடைபெற இருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார். [17]

## கனடாவில் அமைப்பு

(தென்மராட்சி)

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று தற்போது கனடாவில் வசிக்கும் பழைய மாணவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் கனடாவாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கம் என்ற பெயரில் மாணவர் சங்கத்தினை அமைத்துள்ளார்கள்.

## வருடாந்த பரிசளிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசில் நாள் வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை9மணிக்கு பாடசாலை அருணாசலம் மண்டபத்தில் அதிபர் திரு. க. சந்திரசேகரம் அவர்கள் தலைமையில் இடம் பெறும்.

இதற்கு வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களும் தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கமும், விடுதலைப் புலிகளின் கல்விப் பிரிவைச் சேர்ந்த திரு. வே. இளங்குமரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (86)

## நியமனம்

கூட்டுறவு சங்கங்களின் மேன் முறையீட்டு விசாரணை உத்தியோகத்தராக அ. மகாதேவாவை வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியமித்துள்ளது.

## ஆதாரம்காட்டி பெறவும்

இரண்டு காசோலைகள் வீதியில் கண்டெடுக்கப்பட்டு, விடுதலைப்புலிகளின் அரசியல் துறை, மாவட்ட செயலகம், கோண்டாவிலில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் தோட்டுச் சுரை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கண்காட்சி

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும் கண்காட்சி வைபவமும் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். கண்காட்சி வைபவம் இரண்டு தினங்கள் நடைபெறும். இக் கண்காட்சியின்போது கம்பியூட்டர், விஞ்ஞானம், சமூகவியல் போன்ற கல்வி சம்பந்தமான கண்காட்சிகள் இடம் பெறும். (யோ)


1ஆம் பரிசு இல. 28
2ஆம் பரிசு இல. 109
3ஆம் பரிசு இல 03

**ஆறுதல் பரிசுகள் இல. 214, 21, 615, 169, 186**

பரிசுகளை 08-11-93 க்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகிகள்

[6468]



## எழிலக அதிர்ஷ்டசாலிகள்

ஒக்ரோபர் மாத சீட்டிழுப்பில் பரிசுபெறுவோர்.

1-ம் பரிசு:- திரு. எஸ். கலைவாசன்
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
ரூ. 2500/-

2-ம் பரிசு:- திருமதி வி. நாகலட்சுமி
106, இந்திராபுரம், முகமாலை.
ரூ. 1500/-

3-ம் பரிசு:- திரு. சொக்கன், நல்லூர்.
ரூ 1000/-

❋ நீங்களும் அதிர்ஷ்ட சாலிகளாக இன்றே வருக!

❋ கழிவு விலையில் பல வகைப் பொருட்கள் விற்பனையாகின்றன.

★ எழிலகம் ★
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7830)



## VACANCY

### Project Officer

The post holder will be responsible for the day to day implementation of SCF activities. Main requirements are proven experience in Relief and Rehabilitation and Food security & Income Generating activities. Also experience in project management is required.

The applications should be sent to the following address:

Save the Children Fund (UK)
"Karuvemban valavu"
Rajaveethy,
Thirunelvely.

**Closing date: Two weeks from the advertisement of the post.**

(சி-7829)



★ **தம்பி** (கணபதிப்பிள்ளை ஜெயநாதன் - நாவற்குடா -மட்டு)

1987ஆம் ஆண்டு யாழ்-பொன்னாலைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சுகன்** (மாரி சக்திவேல் - வாமதேவபுரம், அடம்பன்-மன்னார்)

யாழ் - கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**றூபி** (மாரியம்மா மாரிமுத்து-இலுப்பைக்கடவை - மன்னார்)

யாழ்-கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சபரி** (ஹம்சா அத்துவிதானந்தன்-திருநெல்வேலிதெற்கு -யாழ்)

மட்டு-கல்லடிப்பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்,

யாழ்-உடுவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழர்கள்,

1988ஆம் ஆண்டு பாவற்கொடிசேனையில் இந்தியப் படையினர் சுட்டதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். ஜஸ்ரீன்** (அந்தோனி ஆரோக்கியநாதன்-வீச்சுக்கல் முனை, புதூர்-மட்டு))

யாழ்-சரசாலைப்பகுதியில் தேசவிரோதிகளால்சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான.

**சுந்தரம்**

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம்-தச்சன்காடு சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**ராசன்** (யோசப் ராஜேந்திரன்-பாடும்மீன்வீதி-மட்டு)

**கீர்த்தி** (தம்பிப்பிள்ளை சங்கரன்-செங்கலடி-மட்டு)

**லெப். மரிக்கார்** (செல்லமாணிக்கம் ரதீஸ்வரன் - பெரிய குளம், நெடுங்கேணி-மணலாறு)

**டில்லி** (தேவதாஸ் சாம்சன்-கற்சிலைமடு-ஒட்டிசுட்டான்)

**2-ம் லெப். ரோம்** (முத்துலிங்கம் கிருஷ்ணமூர்த்தி- பதுளை-கண்டி)

**மேஜர் சஞ்சிகா** (கலைச்செல்வி சுந்தரராஜன்- ''குறளகம்'' கரவெட்டி கிழக்கு-யாழ்)

**கப்டன் அருந்ததி** (சிவரஞ்சினி சண்முகநாதன்-அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு-யாழ்)

**லெப். காஞ்சனா** (சறோசினி கணபதிப்பிள்ளை-காந்தி வீதி-வல்வெட்டித்துறை)

**2-ம்லெப். அன்று** (நாகமுத்து திரவியநாதன் - புன்னாலைக்கட்டுவன்தெற்கு-யாழ்)

**சேகர்** (நித்தியானந்தன் அன்புக்குமரன்-இணுவில் கிழக்கு- யாழ்)

**ஈசன்** (சுப்பிரமணியம் சங்கர் அரியாலை கிழக்கு-யாழ்)

**பாஞ்சாலன்** (சற்குணம் மாதவன்-மணற்பாதி, கரவெட்டி -யாழ்)

**கார்த்திக்** (சிதம்பரநாதன் கோணேஸ்வரன்-பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு-யாழ்)

சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய.

**சுனில்** (— அருமைநாயகம்-கோணாவில், அக்கரைப்பற்று -அம்பாறை)

**ராஜன்** (கார்த்திகேசு ரவி-கஞ்சிகுடிச்சாறு-மட்டு)

கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கோணேஸ்** (தி. கோணேஸ்வரன்- நிலாவெளி திருமலை)

1992ஆம் ஆண்டு அம்பாறை-வொறப்பனை விமானப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் சந்திரராஜன்/ரேகன்** (சண்முகநாதன் பாஸ்கரன்- அக்கரைப்பற்று-அம்பாறை)

**லெப். சங்கரதாசன்/குயிலி** (இராமசாமி செல்வம்-சந்தி வெளி-மட்டு)

**குழந்தைவேல்/உதயன்** வீரக்குட்டி சந்திரசேகரம்-இலுப்பையடிச்சேனை-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

[சி-7826]

NATIONAL LIBRARY SECTION, MUNICIPAL LIBRARY SERVICES, JAFFNA.

# தமிழர்களுக்கு தனித்துவமான வைத்தியமரபு சித்த மருத்துவமாகும்

## துணைவேந்தர் அ. துரைராஜா

(யாழ்ப்பாணம்)

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் மேல்நாட்டு வைத்தியர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். சித்த வைத்தியர்களே உள்ளூரில் மக்களுக்கு கூடுதலான சேவையாற்றி வருகிறார்கள். மூலிகைத் தோட்டம், ஆராய்ச்சி, உற்பத்தி என்பனவற்றிலும் சித்த வைத்தியம் வளரவேண்டும் எவ்விதமான ஆராய்ச்சிகளையும் இங்குள்ள ஆராய்ச்சியாளர்கள் திறம்படச் செய்வார்கள். அதற்கு ஆண்டவன் கட்டாயம் அருள்புரிவார் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார்.

அருள்மிகு நாச்சிமார் ஆலய பூசை வழிபாட்டுடன் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தை திறந்து வைத்துப்பேசுகையில் இவ்வாறு அவர் தெரிவித்தார். யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார். வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பேராசிரியர் துரைராஜா அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழீழத்துக்குத் தனித்துவமான மொழி. கலை இருப்பதுபோல வைத்தியமும் தனித்துவமாக ஒன்றுண்டு அது சித்த வைத்தியமாகும். தமிழ் வைத்தியம்தான் சித்த வைத்தியம். தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள கலையாகும். அந்நிய ராட்சியில் எமது வைத்தியம் அழிக்கப்பட்டது. நாம் எமது வைத்தியத்தை முன்னுக்குக் கொண்டுவந்து உலகறியச் செய்ய வேண்டும் என்றார்.

வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன் பேசுகையில் மேல்நாட்டு வைத்தியர்கள் சித்த மருத்துவம் வளர்த்து மீண்டும் உன்னத நிலைக்கு வரவேண்டும் என்றே விரும்புகிறார்கள். சில சித்த வைத்தியர்கள் அதை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறார்கள். எங்களுக்குக் கைகொடுத்து உதவக்கூடிய சித்த வைத்திய முறையை வளர்த்து வைப்பது எமது எல்லோருடைய கடமையாகும். மனிதகுல மேம்பாட்டுக்கு இச் சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உதவ வேண்டும். அதற்கு எல்லோரும் உதவவேண்டும் என்றார்.

---

நல்லை ஆதீன முதல்வர் தடுப்பு

## சர்வதேச விசாரணைக்கு இந்து பேரவை கோரிக்கை

கொழும்பில் நல்லை ஆதீன சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தங்கி இருந்தவேளையில் சீதுவையில் வைத்து சோதனைக்குட்படுத்தபட்டமை இந்துக்களை அவமரியாதை செய்யும் செயலாகும் என யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை கண்டனம் செய்துள்ளது

இது குறித்து விடுத்த அறிக்கையில் அனைத்து மதத்தையும் சமமாக மதிக்கிறோம் என்று கூறும் இலங்கை அரசு இந்துமதத் தலைவரைத் தெரிந்து கொண்டே சீதுவைப் பொலிஸ் காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டமை மூலம் சர்வ மதத்தையும் சமத்துவமாக பேணுகிறோம் என்று பாசாங்கு செய்வதை அம்பலப்படுத்தியுள்ளது.

இலங்கைத் தீவில் இந்து மதத் தலைவருக்கு இத்தகைய செயல் நிகழும் போது சாதாரண பொதுமக்களுக்கு என்ன நிலை என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஆகையால் இச்சம்பவத்தை விசாரணை செய்வதற்குபக்க சார்பற்ற சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என இந்து சமயப் பேரவை இலங்கை அரசைக் கோருகிறது.

மேலும் இச்சம்பவத்தை அனைத்து மதத் தலைவர்களும் ஒருங்கிணைந்து ஒரே குரலில் எதிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது. எனதெரிவிக்கப்படுகிறது

---

## கொழும்பில் கடத்தப்பட்ட சிலரின் விபரங்கள் கிடைத்தது

(கொழும்பு)

சமீபத்தில் கொழும்பில் இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் வந்தோரால் கடத்தப்பட்டவர்களில் ஏழு பேரது பெயர் விபரங்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன.

நாகையா ரவிச்சந்திரன், பத்மநாதன் கோபிநாதன், வடிவேலு பார்த்திபராஜன், நடராஜா மனோரஞ்சித், அருளப்பு யூட் அருள்ராஜா, தில்லையம்பலம் உதயராணி, நாராயணசிங்கம் இந்திரா காந்தி, நாராயணசிங்கம் மகாலட்சுமி ஆகியோர் இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் சிலராவர்.

கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டவர்களின் உறவினர்களால் உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட போதும், பாராளுமன்றத்திலும், மனித உரிமைக் குழுக்களிடமும் பிரஸ்தாபிக் தகவல்களை வெளியிட தயங்குவதாக மனித உரிமைகள் அமைப்பை சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இக் கடத்தல்கள் தொடர்பாக அவ்வப் பகுதி பொலிஸ் நிலையங்கள் கை விரித்துவிட்டன.

---

### பன்றி தாக்கியதால் காயமுற்றார்

(தென்மராட்சி)

வயல் பார்க்கச் சென்ற ஒருவர் காட்டுப் பன்றி தாக்கியதால் படுகாயமடைந்தார். எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்தபா சத்தியபாலன் (32வயது) என்பவர் தனது வயலைப் பார்க்கச் சென்ற சமயம் நேற்றுக் காலையில் காட்டுப் பன்றி தாக்கியதால் படுகாயமடைந்தார் கால், கை ஆகிய இடங்களில் காயமுற்று இவர் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு எடுத்துவரப்பட்டு அனுமதிக்கப்பட்டார். (86)

### உதவிப்பணம் கொடுப்பனவு

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு பகுதிகளைச் சேர்ந்த பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் யாழ்ப்பாணம் மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபா

---

## 2000, பனம் விதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி நடைமுறைப்படுத்தி வரும் பனைவிதை நடுகைத் திட்டத்தின் கீழ் யாழ் - கல்லுண்டாய் வெளிப்பகுதியில் அண்மையில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதி வீதியோரங்களில் யாழ்ப்பாணப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் 2000 பனை விதைகளையும், கொத்துக்கட்டி மயானப்பகுதியில் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் 3000 பனை விதைகளையும் நாட்டினர்.

மேற்படி திட்டத்தின் அடிப்படையில் கடந்த வருடம் கல்லுண்டாய் வெளி வீதியோரங்களில் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடுகை செய்யப்பட்ட 2000 பனம் விதைகளில் பெரும்பாலானவை முளைத்துப் பயிராகியிருப்பதை தற்போது காணக்கூடியதாக உள்ளது

## மூன்று மாதங்கள் வேதனம் கிடைக்கவில்லை

(கொழும்புத்துறை)

இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகலதர ஊழியர்களுக்கும் கடந்த ஆகஸ்ட்மாதம் தொடக்கம் மூன்று மாதங்கள் எது வித வேதனக்கொடுப்பனவுகளும் இன்றுவரை கிடைக்கவில்லை என ஊழியர்கள் ஆழ்ந்தகவலைகொண்டுள்ளனர்.

கொழும்பில் செயல் பட்டு வரும் தலைமைச் செயலகத்துடன் தமது மூன்று மாதக் கொடுப்பனவுகளையும் பெறப் பலதடவைகள் கடித மூலம் தொடர்பு கொண்டும் இது கால வரை ஒருவித பதிலும் கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (24

---

யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1994

## சந்தைகள், இறைச்சிக்கடைகள்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01. 01 1994 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 19. 11. 93 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப்படிவ கட்டணம் ரூ 100/- உம் செலுத்துவதன் பேரில் 18 11. 93 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் "சந்தை/ கடைக்கான" கேள்வி என எழுதப்பட்ட கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 19. 11. 93 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபை நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். தபாலில் அனுப்பப்படுமாயின் அதனால் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் 19. 11. 93 பிற்பகல் 2 30 மணிக்கு திறந்து ஆராயப்படும் அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாக இருக்கலாம்

| குத்தகை விபரம் | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆக குறைந்த கேள்வித் தொகை | மாதவாடகை |
|---|---|---|---|---|
| 01. பெரியகடை மரக்கறிச் சந்தை | 1 வருடம் | 5000.00 | 150000 00 | |
| 02. குருநகர் சந்தை | ,, | 5000 00 | 175000 00 | |
| 03. செங்குந்தா சந்தை | ,, | 5000.00 | 275101 00 | |
| 04. நாவாந்துறை சந்தை | ,, | 2500.00 | 75000 00 | |
| 05. பாசையூர் சந்தை | ,, | 2500 00 | 40000 00 | |
| 06. கொட்டடி சந்தை | ,, | 500.00 | 1000 00 | |
| 07. அரியாலை சந்தை | ,, | 1000 00 | 150[illegible]0 00 | |
| 08. கொழும்புத்துறை சந்தை | ,, | 500.00 | 1100 00 | |

## இறைச்சிக் கடைகள்

கொட்டடி சந்தை ஆட்டிறைச்சிக் கடை

| | | | | |
|---|---|---|---|---|
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 5600 00 | 123 75 |
| ,, 02 | ,, | 2500 00 | 6300.00 | 112 50 |
| ,, 03 | | [illegible] | [illegible] | [illegible] |

மூலம் சர்வ மதத்தையும் சமத்துவமாக பேணுகிறோம்

என்றும் கேட்டுக்கொள்கிறது. எனதெரிவிக்கப்படுகிறது

## கொழும்பில் கடத்தப்பட்ட சிலரின் விபரங்கள் கிடைத்தது

(கொழும்பு)

சமீபத்தில் கொழும்பில் இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் வந்தோரால் கடத்தப்பட்டவர்களில் ஏழு பேரது பெயர் விபரங்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன.

நாகையா ரவிச்சந்திரன், பத்மநாதன் கோபிநாதன், வடிவேலு பார்த்திபராஜன், நடராஜா மனோரஞ்சித், அருளப்பு யூட் அருள்ராஜா, தில்லையம்பலம் உதயராணி, நாராயணசிங்கம் இந்திரா காந்தி, நாராயணசிங்கம் மகாலட்சுமி ஆகியோர் இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் சிலராவர்.

மேலும் பலர் கடத்தப்பட்டிருக்கின்ற போதும் அச்சம் காரணமாக உறவினர்கள் தகவல்களை வெளியிட தயங்குவதாக மனித உரிமைகள் அமைப்பை சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இக் கடத்தல்கள் தொடர்பாக அவ்வப் பகுதி பொலிஸ் நிலையங்கள் கை விரித்துவிட்டன.

கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டவர்களின் உறவினர்களால் உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட போதும், பாராளுமன்றத்திலும், மனித உரிமைக் குழுக்களிடமும் பிரஸ்தாபிக்கப்பட்ட போதும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என்பது தெரிந்ததே.

## 'நரோமா' சேவைகள் 3 மாதங்களுக்கு நிறுத்தம்

(நமது நிருபர்)

"நரோமா" பயணிகள் சேவை மூன்று மாதங்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

காலநிலை சீரின்மை காரணமாக ஜனவரி மாதம் வரை பருத்தித்துறையிலிருந்து எந்தவொரு பயணிகளையும் இக் கப்பலில் ஏற்றிச் செல்ல முடியாது எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ச)

## 'வாதுவ' கப்பல் 7ஆம் திகதி புறப்படும்

(நமது நிருபர்)

பருத்தித்துறையில் உணவுப் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'வாதுவ' கப்பல் எதிர்வரும் 7ஆம்திகதி இங்கிருந்து திருமலை நோக்கி புறப்படவுள்ளது.

அன்றைய தினம் இதில் 40 பயணிகள் செல்லவுள்ளனர். திருமலைசெல்லும் இக் கப்பல் ஒரு வாரத்தில் அங்கிருந்து 90 பயணிகளையும் மாவையும் ஏற்றிக் கொண்டு பருத்தித் துறைக்கு வரவுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ச)

## மக்கள் அடிப்படைவசதிபெற பொது அமைப்புக்கள் செயற்படலாம்

### பேராசிரியர் என். பாலகிருஷ்ணன்

(யாழ்ப்பாணம்)

மக்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வகையில் பொது அமைப்புக்கள் மக்களுக்கான தமது செயற்திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டிய பொறுப்புடையன ஆகும்.

இவ்வாறு பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தெரிவித்தார். யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில், சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றோருக்காக யாழ். மாநகர சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் உலகின் எழுபது வீதமான மக்கள் எதுவித வளமும் கிடைக்காத காரணத்தினால் வறுமையில் வாடுவதாகவும் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தின் ஆரம்ப உரையை யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ பாலசிங்கமும், இப் பயிற்சியின் நோக்கம் பற்றிய உரையை யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி எம். தெய்வேந்திரமும் நிகழ்த்தினர்.

தால் படுகாயமடைந்தார். எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்தபா சத்தியபாலன் (32வயது) என்பவர் தனது வயலைப்பார்க்கச்சென்ற சமயம்நேற்றுக் காலையில் காட்டுப் பன்றி தாக்கியதால் படுகாயமடைந்தார் கால், கை ஆகிய இடங்களில் காயமுற்று இவர் மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு எடுத்துவரப்பட்டு அனுமதிக்கப்பட்டார். (86)

## உதவிப்பணம் கொடுப்பனவு

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு பகுதிகளைச் சேர்ந்த பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் யாழ்ப்பாணம் மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபாலகங்களில் புரட்டாதி ஐப்பசி மாதங்களுக்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் என்று பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். மேலும் கெற்பெலி அகதிமுகாமில் வசிப்பவர்கள் விடத்தல்பளை உப தபாலகத்தில் இக்கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

## ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கு்பாபிஷேகம்

முல்லை மாவட்டம் ஒட்டிசுட்டான் அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலய புனராவத்தன உத்தமோ உத்தம பூப்பத்திமூன்று குண்ட பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 10 11 93 புதன் கிழமை நடைபெற உள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து நாற்பது இந்துக் குருமார்கள் இக் கும்பாபிஷேகத்தை சிறப்பிக்க செல்லஉள்ளார்கள்.

ஈழத்தில் பிரசித்திபெற்ற சிவாலயங்களுள் முல்லை மாவட்ட ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளில் சுகாதார கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ரீதியாக மாணவர்களுக்கு கொலரா நோய்த் தடுப்பு சம்பந்தப்பட்ட கருத்தரங்குகள் "இன்ரறக்ளிப்" அனுசரணையுடன் வைத்தியர்களினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதில் சுத்தம், சுகாதாரம் பற்றியும் போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (24)

அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாக இருக்கலாம்

| குத்தகை விபரம் | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆக குறைந்த கேள்வித் தொகை | மாதவாடகை |
|---|---|---|---|---|
| 01. பெரியகடை மரக்கறிச் சந்தை | 1 வருடம் | 5000.00 | 150000 00 | |
| 02. குருநகர் சந்தை | ,, | 5000 00 | 175000 00 | |
| 03. செங்குந்தா சந்தை | ,, | 5000.00 | 275101 00 | |
| 04. நாவாந்துறை சந்தை | ,, | 2500.00 | 75000 00 | |
| 05. பாசையூர் சந்தை | ,, | 2500 00 | 40000 00 | |
| 06. கொட்டடி சந்தை | ,, | 500.00 | 1000 00 | |
| 07. அரியாலை சந்தை | ,, | 1000 00 | 150[illegible]0 00 | |
| 08. கொழும்புத்துறை சந்தை | ,, | 500.00 | 1100 00 | |

## இறைச்சிக் கடைகள்

### கொட்டடி சந்தை ஆட்டிறைச்சிக் கடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடை இல. | 01 | 1 வருடம் | 2500.00 | 5600 00 | 123 75 |
| ,, | 02 | ,, | 2500 00 | 6300.00 | 112 50 |
| ,, | 03 | ,, | 2500.00 | 6000.00 | 112.50 |
| ,, | 05 | ,, | 2500.00 | 10301.00 | 112.50 |
| ,, | 06 | ,, | 2500.00 | 6000 00 | 112.50 |
| ,, | 07 | ,, | 2500 00 | 5500.00 | 112 50 |
| ,, | 08 | ,, | 2500.00 | 5651.00 | 112 50 |
| , | 11 | ,, | 2500.00 | 5100 00 | 112 50 |

### குருநகர் சந்தை மாட்டிறைச்சிக் கடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடை இல. | 01 | 1 வருடம் | 2500.00 | 50200.00 | 195.00 |
| ,, | 02 | ,, | 2500.00 | 21000.00 | 195 00 |
| ,, | 03 | ,, | 2500 00 | 35000.00 | 195.00 |
| ,, | 04 | ,, | 2500.00 | 25000.00 | 195 00 |
| ,, | 05 | ,, | 2500.00 | 51200 00 | 195 00 |
| ,, | 06 | ,, | 2500.00 | 50101 00 | 195 00 |
| ஆ. இ. கடை | 07 | ,, | 2500 00 | 15000.00 | 195.00 |

### நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடை இல. | 01 | 1 வருடம் | 2500 00 | 7500.00 | 200 00 |
| ,, | 02 | ,, | 2500 00 | 6600 00 | 200.00 |
| ,, | 03 | ,, | 2500.00 | 6000 00 | 200 00 |
| ,, | 04 | ,, | 2500 00 | 5450 00 | 200 00 |
| ,, | 05 | ,, | 2500.00 | 5250.00 | 200.00 |
| ,, | 06 | ,, | 2500.00 | 7050 00 | 200 00 |
| ,, | 07 | ,, | 2500'00 | 5250 00 | 200 00 |
| ஆ. இ. கடை | 08 | ,, | 2500.00 | 5000.00 | 200.00 |
| கடை இல. | 09 | ,, | 2500.00 | 5300 00 | 200 00 |
| கோழி கடை | 10 | ,, | 2500.00 | 5000.00 | 200 00 |

### பாசையூர் மாட்டிறைச்சிக் கடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடை இல. | 01 | 1 வருடம் | 2500 00 | 50000 00 | 135 00 |
| ,, | 0" | ,, | 2500 00 | 25000.00 | 135.00 |
| அரியாலை மா. இ. | | ,, | 2500.00 | 16500 00 | 135.00 |
| அரியாலை ஆ. இ. | | ,, | 2500 00 | 10600 00 | 135.00 |

### செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடை இ. | 01 | 1 வருடம் | 2500.00 | 15000.00 | 112.50 |
| ,, | 02 | ,, | 2500.00 | 7500.00 | 112 50 |
| புங்கங்குளம் ஆ இ. | | ,, | 2500.00 | 12000.00 | 200 00 |
| ,, மா. இ. | | ,, | 2500 00 | 20000 00 | 200 00 |
| நரிக்குண்டு மா. இ. | | ,, | 2500.00 | 62000 00 | 135 00 |

வே பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01. 11. 1993

(சி-7822)

## 150 மாணவர்களின் கல்வி வசதி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு பகுதியை சேர்ந்த சுமார் நூற்றியைம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த ஒன்றரை வருடத்திற்கும் மேலாக கல்வி வசதியின்றி பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தொடுவாய் வாய்க்கால், பூனைத்தொடுவாய் போன்ற பகுதிகளில் தற்காலீக குடிசை அமைத்து வாழும் தொழிலாளர்கள் குடும்பங்களைச் சேர்ந்த இந்த மாணவர்களுக்கு மாணவர் மதிய உணவு முத்திரைகள் கூட கிடைப்பதில்லையாம்.

இதேவேளை கட்டைக்காடு கிராமத்தில் செயற்பட்டு வந்த கட்டைக்காடு ஆர். சி. தமிழ்க் கலவன் பாடசாலை தாளையடி பாடசாலையுடன் இணைக்கப்பட்டு அப்பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அங்கேயே பணிபுரிகின்றனர். சுமார் பதினைந்து மாணவர்கள் மட்டுமே தாளையடி பாடசாலைக்கு சென்று வருகின்றனர். ஆனால் கட்டைக்காடு ஆர். சி. பாடசாலையை சேர்ந்த சுமார் 150 மாணவர்கள் தமது அடிப்படைக் கல்வியைக்கூட பெறமுடியாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## வவுனியா ஆஸ்பத்திரியில் மாறிய குழந்தைகள்

(வவுனியா)

வவுனியா ஆதாரவைத்திய சாலையில் கடந்தவாரம் மகப்பேற்றுக்காக கிளிநொச்சியிலிருந்து வவுனியா வைத்திய சாலை கொண்டு செல்லப்பட்ட பெண் ஒருவர் பெற்ற ஆண் குழந்தை பெண் குழந்தையாக அங்குள்ள சிங்கள தாதியர்களால் வழங்கப்பட்டது.

பெண் குழந்தையை பெற்ற சிங்கள பெண் ஒருவருக்கு மேற்படி ஆண் குழந்தையை வழங்கிவிட்டு அவரின் பெண் குழந்தையை தமிழ் தாயிடம் தாதியர் வழங்கினராம். எனினும் தமிழ் தாதி ஒருவர் தலையிட்டதையடுத்து ஆண் குழந்தை தமிழ் தாயிடமே வழங்கப்பட்டுவிட்டது.

இங்கு பிரசவ வேதனையால் அவதிப்படும் தமிழ் பெண்களை சிங்கள தாதிகள் தாக்குவதாகவும் அங்கு சென்று திரும்பியவர்கள் கூறுகின்றனர்.

## 3-ம் ஆண்டு நினைவலைகளில்...



மலர்வு:
14-03-1968
★
வீரச்சாவு:
03-11-1990

### லெப். காஞ்சனா
(சரோஜினி கணபதிப்பிள்ளை)

மாவட்ட புரம் தன்னில்
மாவைப் போர் புரிந்து
எதிரி படையழித்து
இன்னுயிரை—மண்ணதற்காய்
ஈந்து நீ சென்றனையோ
ஆண்டு மூன்று சென்றாலும்—மகளே
ஆறவில்லை உன் பிரிவு.

காந்தி வீதி,
வல்வெட்டித்துறை
- குடும்பத்தினர்
(6453)

## 3-ம ஆண்டு வீர அஞ்சலி



### ஓய்வூதியர்கள் கோரிக்கை

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, நவம்பர் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 10-ம் திகதிக்கு முன்பாக வழங்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் வட மாநில ஓய்வூதியர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று நல்லூர் சாதனா பாடசாலையில் இடம்பெற்ற சங்கத்தின் பொதுக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை விடப்பட்டது.

### புதிய அலுவலகம் திறப்பு

[வடமராட்சி]

கரவெட்டி வட்டத்திற்கான புதிய கோட்டக்கல்வி அலுவலகம் ஒன்று அண்மையில் நெல்லியடி கன்பொல்லை வீதியில்சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

கரவெட்டிகொத்தணி அதிபர் திரு த.சிவராசாதலைமையில்தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன் ஏற்றிவைத்தார் மங்கள விளக்கை கல்விப் பணிப்பாளர் கல்வி மேம்பாட்டுக்கழக பொறுப்பாளர் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் பலரும் ஏற்றி வைத்தனர். வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வு ஆரம்பத்தின் போது நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர்களது பாண்ட் வாத்திய இசையும் திரு இருதயக்கல்லூரி மாணவர்களது அணிவகுப்பு மரியாதையும் இடம் பெற்றன

### தமிழ்த்தினவிழா

(யாழ்ப்பாணம்)


யாழ்-வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினர் நடத்திய தமிழ்த்தினவிழா கடந்த வெள்ளிக்கிழமைவித்தியாலய அதிபர் திரு.து சந்தோசம் தலைமையில்நடைபெற்றது இவ்விழாவில் திருமதிமனோன்மணி சண்முகதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (22)

### கொடித்தினம்

(கொழும்புத்துறை)

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ் சைவத் தொண்டர் கொடித்தினம் கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்படி பணிமனையில் தலைவர் திரு.இ. தவரஞ்சன் தலைமையில் மங்களவிளக்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கணபதிப்பிள்ளை பவளராஜா

தோற்றம்:- 22-9-1965
மறைவு:- 28-10-1988
திதி: 3-11-1993

அன்பின் உருவமாகவும் அறிவின் சுடராகவும் பாசத்தின் பிறப்பிடமாகவும் திகழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புச்செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அந்தியடி,
யாழ்ப்பாணம். (6457)
- குடும்பத்தினர்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### பொன்னையா கந்தையா

மண்ணில்: 13 3-1926
விண்ணில்: 4-10-1993



# மேஜர் சஞ்ரிகா (சுந்தரராஜ் கலைச்செல்வி)

மண்ணில் மலர்வு: 18. 04. 1969 மண்ணில் உதிர்வு: 03. 11. 1990

நினைவதில் நீங்காத கலைச்செல்வியே
செயலிலே செயற்கரிய செய்கையதனால்
அளப்பரும் வீரரின் வரிசையிலே
அழியாத புகமுடம்பு படைத்தாய்.

அஞ்சாத என் செல்வமே!
உனக்கோர் மரணம் கலங்கிடாது
மரணத்தை தழுவிக்கொண்டாய்
ஆனால்! நீ மரணிக்கவில்லை.

"குறளகம்"
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

- குடும்பத்தினர்

(6455)

## தமிழ்த்தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்-வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினர் நடத்திய தமிழ்த்தினவிழா கடந்த வெள்ளிக்கிழமைவித்தியாலய அதிபர் திரு.து சந்தோசம் தலைமையில்நடைபெற்றது இவ்விழாவில் திருமதிமனோன்மணி சண்முகதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (22)

## கொடித்தினம்

(கொழும்புத்துறை)

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ் சைவத் தொண்டர் கொடித்தினம் கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்படி பணிமனையில் தலைவர் திரு.இ. தவரஞ்சன் தலைமையில் மங்களவிளக்கேற்றிப் பின் பூசை வழிபாட்டுடன் நடைபெற்றது.

பின் தொண்டர்களால் கொடி விற்பனையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (24

## பொருட் காட்சி

(கொழும்புத்துறை)

வதிரி தேவரையாளிஇந்துக் கல்லூரி மாணவர்களும், முறைசாராக் கல்வி மாணவர்களும் கூட்டாக இணைந்து நடாத்தும் பொருட் காட்சிஒன்று இன்று புதன்கிழமை மேற்படி கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது



## பொன்னையா கந்தையா

மண்ணில்: 13 3 - 1926 விண்ணில்: 4 - 10 - 1993

3-11-93

அன்பின் திருவுருவமாய் பாசத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை ஆறாத்துயரில் மூழ்க வைத்து மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! எங்கள் எல்லோரதும் குடும்பங்களினதும் ஒளி விளக்கே - உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 3-11-93 இன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும், போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை தெற்கு

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்

(5066)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர்
சங்கத்தின் ஆதரவில்

# நிதியுதவிக் காட்சியாக

**காலம்: 06-11-1993 சனிக்கிழமை**

**நேரம்: மாலை 6.00 மணி**

**இடம் : சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானம்**

பருத்திநகர் சாண்டோ எம் துரைரத்தினத்தின்
வீரதீரச் செயல்கள்

- ★ நெருப்புப் புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
- ★ இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
- ★ 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7' உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்.
- ★ மோட்டார் சைக்கிளை வாயால் தூக்குதல்.
- ★ பாரங்கொண்ட கல்லை மார்பின் மேல்வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
- ★ 3''200 ஆணி அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்கவைத்து மார்பின் மேலாகப் பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
- ★ பொலிகை சிவா அண்ணா நடாத்தும் தீச்சுடர் சிலம் படிநிகழ்ச்சி.

எனவே அனைத்து மக்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

உங்கள் ஆதரவிற்கு நன்றி

(5068) சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம்

## சிந்தனைக்கு

எதிரியை எண்ணி உன்னையே பொசுக்கும் அளவுக்கு உலையை மூட்டி விடாதே.

-- வில்லியம் ஷேக்ஸ்பியர்

# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05


## ஆள் கடத்தல்களுக்கு அரசே முழுப்பொறுப்பு

எதிர்பார்க்கப்பட்டது போன்றே கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவது தொடர்பாகவும், காணாமற் போவது குறித்தும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களும், ஒவ்வொரு குழுவும்தமக்கும் ஆள்கடத்தல்களுக்கும் தொடர்பில்லை என்ற மறுப்பும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இந்த வரிசையில் கடந்த சில தினங்களுக்கு முன், கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவதற்கு 'புளொட்' இயக்கமே பொறுப்பு என சிறிலங்காப் பொலிஸ் அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியிருந்தார். இதனை மறுத்த புளொட் குழு தமிழ் இளைஞர்கள் கடத்தலுக்குப்பொலிசாரே முழுப் பொறுப்பு எனப் பதிலுக்கு குற்றம் சுமத்தியது.

இதேவேளை, கிழக்கிலங்கையில் செயற்பட்டு பல படுகொலைகளுக்குக் காரணமாக இருந்த இரகசிய உளவுப் பிரிவினரும், தமிழ்க் குழுக்களில் இருந்து பிரிந்து சென்று இவ்உளவுப் பிரிவினருடன் இணைந்து செயற்படுவோருமே இப்படுகொலைகளுக்குக் காரணம் எனக் கொழும்பிலுள்ள தமிழ்ப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பி. கிளர்ச்சி இடம்பெற்றபோதும் இவ்வாறே இலக்கத் தகடில்லா வாகனங்களில் வருபவர்கள் சிங்கள இளைஞர்களைக் கடத்திச் செல்வதும், கொலை செய்துவிட்டு டயர் போட்டு எரிப்பதும் சாதாரண சம்பவங்களாக இருந்தன. ஆனால் இக்கொலைகளுக்கு பரஸ்பரம் அரசும், ஜே வி. பி யும் குற்றம் சாட்டிக் கொண்டன. அப்பொழுது மக்களுடன், ஏன் பத்திரிகையாளர்களுக்குக் கூட ஒரு குழப்ப நிலை இருந்தது.

ஆனால் தற்பொழுது கொழும்பில் இடம்பெறும் தமிழ் இளைஞர்கள் கடத்தலும், கொலை செய்யப்படுதலும் தொடர்பாகக் குழப்பம் ஏதுமில்லை. இப்படுகொலைகளுக்கு யார் பொறுப்பு என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. ஏனெனில், இக்கொலைகளை யார் செய்யினும் அவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் அனுமதியுடனும், ஆசீர்வாதத்துடனேயும் செய்கின்றனர் என்பதை அரசாங்கம் மறுக்க முடியாது.

# நாற்றுமேடை பராமரிப்பு

மிளகாய், தக்காளி, கத்தரி, கோவா ஆகிய பயிர்களில் வீரிய நாற்றுக்களைப் பெறுவதற்கு அனுசரிக்க வேண்டிய முறைகள் இங்கு குறிப்பிடப்படுகிறது. நாற்று மேடைகளில் அடி அழுகல் நோயைத் தவிர்த்துக் கொள்வது சிறந்தது. இந்நோய் மண்ணிலுள்ள பல்வகைப் பங்கசுகளால் உண்டாகின்றது. இ ளுள் 'பிதியம்' வகைப்பங்கசு க்கியமானது.

ஒரே குடுங்பப யிர்களான மிளகாய், கத்தரி, தக்காளி, உருளைக்கிழங்கு, புகையிலை என்பன தொடர்ச்சியாகப் பயிரிடுவதனால் இந்நோய்களின் தாக்கம் குடாநாட்டில் பெரிதும் காணப்படுகிறது. இந்நோயின் பாதிப்பை குறைப்பதற்கு வெவ்வேறு குடும்பப் பயிர்களை (பயற்றை இனப் பயிர்கள், சோளம், குரக்கன் திணை, மரவள்ளி என்பன இவற்றுள் சில) சுழற்சிமுறையில் பயிரிடுவது சிறந்தது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நாற்றுமேடை தொற்று நீக்கம் செய்வது முக்கியம்.

### மேடை தயாரித்தல்

சூரிய வெளிச்சம் உள்ளதும் நீர் வடிமானம் கொண்டதுமான இடத்தைத் தெரிவு செய்து தரை நன்றாகத் தூர்வையாக்கிய பின்னர் வசதிக்கேற்ற விஸ்தீரணத்தில் (சாதாரணமாக ஒரு மீற்றர் அகலம் மூன்று மீற்றர் நீளம் உடையவை) உயர் (10 15 ச.மீ உயரம்) மேடைகள் ஏற்படுத்துதல் வேண்டும். அரை ஏக்கர் அல்லது 2000 கண்டுத்தரை நடுவதற்கு தேவைப்படும் நாற்றுக்களை மிளகாயெனின் பன்னிரண்டு (12) மேடைகளிலிருந்தும் தக்காளி கத்தரி, கோவா என்பனவற்றை 6-8 மேடைகளிலிருந்தும் பெறலாம். நன்றாக உக்கிய எருவை மண்ணுடன் 1:1 என்ற அண்ணளவிலும் இன்னும் உரிய அளவு செயற்கை உரங்களான 300 கிராம் முக்கூட்டுசுப்பர்பொஸ்பேற்றையும் 100கிராம்பொற்றாசையும் கலந்து மேடையைத் தயார் செய்வது சிறந்தது விதைத்து 16-20 நாட்களின் பின் மேற் கட்டாக 300 கிராம் அமோனியம் சல்பேற்றையும் இடுதல் வேண்டும்.

### மேடை தொற்று நீக்கம்

மூன்று முறைகளில்தொற்று நீக்கம் செய்யலாம்;

1] மேடைகளில் வைக்கோல் உமி, அல்லது எரியக்கூடிய குப்பை கூழங்களைப்பரப்பி எரிப்பதன்மூலம் தொற்று நீக்கி பின் விதைப்பு செய்யலாம்.

2] மேடைகள் தயாரித்தபின் வரிசையில் விதைத்துகப்ரான் அல்லது திறாம் ("பொமசால் போட்டே") இவைகளில் ஏதாவதொரு பூஞ்சன நாசினியை பதினைந்து லீற்றர் நீருக்கு இருநூற்றுப்பத்து கிராம் என்ற அளவில் கரைத்து கரைசலை மேடை நன்றாக நனையும் படி பூவாளி கொண்டு தெளித்து தொற்று நீக்கலாம்.

(3) ஒளி புகும் பொலிதீன் விரிப்புஅல்லதுபோர்வை கொண்டு மேடையை ஒரு வாரத்திற்கு மூடி வைப்பதனால் சூரியஒளி மேடையின் உஷ்ண நிலையைச் சுமார் 50 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கச் செய்கிறது. இதனைத் தொடர்ந்து பூஞ்சண நோய்க் காரணிகள், மற்றும் களை விதைகள் என்பன கட்டுப் படுத்தப்படுகின்றன,

மேற்கூறிய முதலாம் மூன்றாம் முறைகளில் தொற்று நீக்கி ஒரு வாரம் கழிந்த பின் விதைப்பு செய்தல் சிறந்தது.

### விதை தொற்று நீக்கலும் விதைப்பும்

விதைகளைத் தொற்று நீக்கி விதைப்பது முக்கியம். கப்ரான் அல்லது திறாம் ("போமசால் போட்டே") ஆகிய பூஞ்சண நாசினிகளில் ஒன்றை 125 கிராம் விதைக்கு 02 கிராம் பூஞ்சண நாசினி என்ற அளவில் நன்றாகக் கலந்து இரண்டு நாட்கள் சென்ற பின் விதைப்பு செய்யலாம்.

பத்திலிருந்து பன்னிரண்டு ச. மீ. இடைவெளி கொண்ட வரிசைகளில் ஐதாக 0.5 ச.மீ. (0. 25 அங்குலம்) ஆழத்தில் விதைத்தல் வேண்டும். விதைகளை மண்ணினால் மூடி ஒரு படை வைக்கோலைப்போட்டு காலையிலும் பிற்பகலிலும் பூவாளி கொண்டு நீர் தெளித்தல் வேண்டும். விதைகள் முளைத்த பின் வைக்கோலை அகற்றிவிட வேண்டும். இரவு வேளைகளில்மண்ணில்தேவைக்கதிகமாக ஈரமிருப்பின் அடி அழுகல் நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

ஆரம்பத்தில் கூடிய சூரிய ஒளி, கடும் மழை இவைகளிலிருந்து இளமையான நாற்றுக்களைப் பாதுகாக்க உரிய முறையில் நிழல் படுத்துதல் சிறந்தது. நாற்றுகள் பருவமடைந்து வரும் பொழுது நிழல்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். நாற்றுகள் உரிய பருவத்தை அடையும் தறுவாயில் (விதைத்து 20—30 நாட்களில்) நீர்ப்பாசனத்தைப் படிப்படியாகக் குறைத்து வயலில் நாட்டும் பொழுது அங்கு நிலவும் சூழலுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியவாறுநாற்றுக்களைப் பலப்படுத்துதல் சிறந்தது.

நாற்றுகள் வளர்ந்து வரும்பொழுது அடி அழுகல்காணப்பட்டால் பாதித்த இடத்தைப் பூஞ்சண நாசினி தெளித்து(30 கிராம் கப்ரான் 10 லீற்றர் நீரில் கலந்து) கட்டுப்படுத்துதல் வேண்டும்.

நிலக் கறையான், எரி எறும்பு, குறவணையன் என்பனவற்றின் தாக்கமிருப்பின் குளோர்பைறி பொஸ் (20 வீதம் செறிகுளம்பு) பூச்சிநாசினி 10 மில்லியை 10 லீற்றர் நீரில் கலந்து இக்கரைசலை மேடையில் விசிறிக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

**ச. பொன்னுத்துரை**

*விவசாய ஆராய்ச்சிப் பொறுப்பதிகாரி, விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி.*

### மிளகாயில் வைரஸ் நோய்

மிளகாய் நாற்றுகளில் வைரஸ் நோய்த்தாக்கம் நாற்றங்காலில் இருந்தே ஆரம்பிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நோயைப் பரப்புகின்ற காவிகளான வெண் ஈ, அழுக்கணவன் என்பவைகளையும் இலைகளைச் சுரண்டி உண்பதனால் சேதம் ஏற்படுத்தும் பனிப்பூச்சி, சாற்றை உறிஞ்சும் சிற்றுண்ணிகளையும் கட்டுப் படுத்துதல் அவசியம்.

பனிப்பூச்சியின் தாக்கம் ஏற்படும் பொழுது இலைகள் மேல் நோக்கிச் சுருண்டு படகு போன்று உருவம் உண்டாகிறது. சிற்றுண்ணிகள் இலையின் கீழ்ப்பக்கத்திலிருந்துசாற்றைஉறிஞ்சிசேதமேற்படுத்துவதனால் இலைகள் கீழ்நோக்கிச் சுருள்வதை அவதானித்து இப்பீடைகளை இலகுவில் இனங்காணலாம்.

வெண் ஈ இலையின் கீழ்ப் பக்கத்திலிருந்து சாற்றை உறிஞ்சுவதனால் இலைகளில் ஒருவித சுருக்கு ஏற்படுவதுடன் வைரஸ் நோய் காரணமாக "சித்திர" தோற்றமும் உண்டாகிறது. நோய் வாய்ப்பட்ட இலையில் நரம்புகள் சாதாரண பச்சை நிறத்தை இழந்து மஞ்சள் நிறமாக இருப்பதையும் அவதானிக்கலாம்.

### கட்டுப்படுத்தல்

இப்பீடைகள் யாவும் பொமோதயன் [அன்றியோ] 33 வீதம் செறிகுளம்பு அல்லது பிரிமிபொஸ் மீதைல் (அக்ரெலிக்) 50% செறிகுளம்பு என்னும் பீடை நாசினிகளில் ஒன்றை 15 லீற்றர் நீருக்கு 45 மில்லி என்ற அளவில் கலந்து இக்கரைசலில் ஒவ்வோர் லீற்றருக்கும் ஒரு கிராம் 80-85 வீதம் நனையும் கந்தகத்தூளையும்கலந்து விசிறவேண்டும். மாற்று பீடை நாசினியான புறபெனோபொஸ் (செலிகுறோன்) 50 வீதம் செறிகுளம்பில் முப்பது மில்லியை 12—15 லீற்றர் நீரில் கலந்து விசிறலாம். விசிறும் பொழுது இலைகளின் இரு பக்கங்களும் ஒன்றாக நனைதல் வேண்டும்.

### தெளிகருவிப் பிரயோகம்

தெளிகருவியின் பீச்சு முனையை உரிய முறையில் தேர்ந்தெடுத்து (விட்டம் குறைந்ததுவாரமுடைய பீச்சு முனை சிறந்தது) விசிறும் பொழுது அதிலிருந்து வெளியேறும் திரவம் மிகவும் சிறிய துளிகளாக இருப்பது முக்கியம். இதன் அனுகூலத்திற்கு தெளிகருவியில் தேவைப்படும் அமுக்கமும் ஏற்படுத்துதல் வேண்டும். இம்முறைகளை அனுசரிப்பதனால் தெளிக்கும் பீடைநாசினி இலைகளிலிருந்து வடிந்து தரையில் சேர்ந்து வீண் விரயமாவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

# காங்கிரஸ் அரசின் செயலற்ற தன்மை ஹஸ்ரத்பால் விடயத்தில் நிரூபணம்

## எல்.கே. அத்வானி குற்றச்சாட்டு

(டில்லி)

சிறீநகரில்ஹஸ்ரத்பால்தர்க்கா மசூதியினுள் அடைக்கலம் தேடியுள்ள தீவிரவாதிகளைக்

நிர்வாகமும், தீவிரவாதிகளும் நடத்தினர். சுமார் 45 நிமிட நேரம் இப் பேச்சுவார்த்தை நீடித்தபோதும் இது பற்றிய

படவில்லை. எனினும் வைத்திய அதிகாரி ஒருவர் மீண்டும் சென்று வைத்திய சிகிச்சைகள்

# இந்தியாவின் ஒருபகுதியே காஷ்மீர் மாநிலமாகும்

## பி.வி. நரசிம்மராவ் வலியுறுத்து

[டில்லி]

காஷ்மீர் மாநிலம் இந்தியாவுடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதியே ஆகும். என்று இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நேற்று முன்தினம்

அத்துடன் அயல்நாடொன்று தீவிரவாதிகளுக்கு உதவுவதன் மூலம் இந்தியாவின் சமாதான சூழ்நிலையைக் குலைப்பதாகவும் சுட்டிக்காட்டினார். மதம், ஜாதி அடிப்படையில் நாட்டை

கொழும்பிலுள்ள தமிழ்ப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பி. கிளர்ச்சி இடம்பெற்றபோதும் இவ்வாறே இலக்கத் தகடில்லா வாகனங்களில் வருபவர்கள் சிங்கள இளைஞர்களைக் கடத்திச் செல்வதும், கொலை செய்துவிட்டு டயர் போட்டு எரிப்பதும் சாதாரண சம்பவங்களாக இருந்தன. ஆனால் இக்கொலைகளுக்கு பரஸ்பரம் அரசும், ஜே வி. பி யும் குற்றம் சாட்டிக் கொண்டன. அப்பொழுது மக்களுடன், ஏன் பத்திரிகையாளர்களுக்குக் கூட ஒரு குழப்ப நிலை இருந்தது.

ஆனால் தற்பொழுது கொழும்பில் இடம்பெறும் தமிழ் இளைஞர்கள் கடத்தலும், கொலை செய்யப்படுதேலும் தொடர்பாகக் குழப்பம் ஏதுமில்லை. இப்படுகொலைகளுக்கு யார் பொறுப்பு என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. ஏனெனில், இக்கொலைகளை யார் செய்யினும் அவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் அனுமதியுடனும், ஆசீர்வாதத்துடனேயும் செய்கின்றனர் என்பதை அரசாங்கம் மறுக்க முடியாது.

எவ்வாறெனில், சிறிலங்கா புலனாய்வுத்துறைக்கு கைது செய்யும் இளைஞர்கள் மீது விசாரணை என்ற போர்வையில் சித்திரவதை செய்யவும், கொலை செய்துவிடவும் அரசாங்கம் பூரண சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது. இந்நிலையில் கொலைகள் இடம்பெறுவதைப் பற்றி அவர்கள் அலட்டிக் கொள்ளப் போவதோ, அச்சப்படப் போவதோ இல்லை இதேபோன்றே தமிழ்க்குழுக்களையும், அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது. அவர்களுக்கு ஆயுத விநியோகம் செய்து ஆயுதங்களுடன் நடமாடவும், தமிழ் இளைஞர்களைக் கைது செய்யவும், சித்திரவதை செய்யவும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கென பெரும் பண ஒதுக்கீட்டையும் அரசாங்கம் செய்து வருகின்றது. ஆகையினால், முன்னர் போல் வேறு யார் மீதும் பழியைப் போட்டு விடவோ அன்றி குழப்பத்தை விளைவிக்கவோ முடியாது. ஏனெனில் கொலைகளுக்கு அரசின் சட்டபூர்வமான, அன்றி சட்ட பூர்வமற்ற குழுக்களே முழுப் பொறுப்பும் ஆகும்.

இதேவேளை, சிறிலங்கா அரசு ஏற்கனவே இவ்வகையான கொலைகள் தொடர்பாக உலக மனிதநேய ஸ்தாபனங்களினதும், நாடுகளினதும் பலத்த கண்டனங்களுக்கு உள்ளாகிய தொன்றாகும். ஆனால் இவ்வாறான கொலைகள் முன்னாள் ஜனாதிபதியுடன் முடிந்துபோன தொன்றாகவே கருதப்பட்டது. ஆனால் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இவ்வாறான கொலைகளுக்கு அனுமதித்திருப்பதானது அவரது பேரினவாதச் சிந்தனையானது எத்தகைய கொடூரமானது என்பதை உலகிற்குக் காட்டுகின்றது. அதாவது, எவ்வாறெனினும் தமிழ் இனத்தை ஒழித்து விட அவர் முயற்சிப்பதையே இது காட்டுகின்றது.

இந்தவகையில் நோக்கும்போது ''இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டம் என்ற பேச்சிற்கே இடமில்லை'' எனக் கூறும் ஜனாதிபதி விஜேதுங்கவிடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக கொலைத் திட்டங்களே இருப்பது போல் தெரிகின்றது. இல்லாவிடில் உலகம் பூராவும் தேசிய இனங்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே ஒரேவழி எனக்கூறும்போது, அவர் இராணுவத்தீர்வை நாடியிருக்க மாட்டார். இந்நிலையில், விடுதலைப்புலிகளின் பாதுகாப்பும், வெளிநாடுகள் சிலவற்றின் அழுத்தங்களும், நெருக்குதல்களும் சிறிதேனும் இல்லாது போனால் தமிழ் இனத்தை அழிக்க டி. பி. விஜேதுங்க ஒரு ''காஸ் சேம்பரையே' இதுவரையில் உருவாக்கி இருப்பினும் ஆச்சரியப்பட ஏதுமிருந்திருக்காது.

---

டுத்தரை நடுவதற்கு தேவைப்படும் நாற்றுக்களை மிளகாயெனின் பன்னிரண்டு (12) மேடைகளிலிருந்தும் தக்காளி கத்தரி, கோவா என்பனவற்றை 6-8 மேடைகளிலிருந்தும் பெறலாம். நன்றாக உக்கிய எருவை மண்ணுடன் 1:1 என்ற அண்ணளவி

றாம் முறைகளில் தொற்று நீக்கி ஒரு வாரம் கழிந்த பின் விதைப்பு செய்தல் சிறந்தது.

### விதை தொற்று நீக்கலும் விதைப்பும்

விதைகளைத் தொற்று நீக்கி விதைப்பது முக்கியம்.

30 நாட்களில்) நீர்ப்பாசனத்தைப் படிப்படியாகக் குறைத்து வயலில் நாட்டும் பொழுது அங்கு நிலவும் சூழலுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியவாறு நாற்றுக்களைப் பலப்படுத்துதல் சிறந்தது.

நாற்றுகள் வளர்ந்து

படகு போன்று உருவம் உண்டாகிறது. சிற்றுண்ணிகள் இலையின் கீழ்ப்பக்கத்திலிருந்து சாற்றைஉறிஞ்சிசேதமேற்படுத்துவதனால் இலைகள் கீழ்நோக்கிச் சுருள்வதை அவதானித்து இப்பீடைகளை இலகுவில் இனங்காணலாம்.

யம். இதன் அனுகூலத்திற்கு தெளிகருவியில் தேவைப்படும் அமுக்கமும் ஏற்படுத்துதல் வேண்டும். இம்முறைகளை அனுசரிப்பதனால் தெளிக்கும் பீடைநாசினி இலைகளிலிருந்து வடிந்து தரையில் சேர்ந்து வீண் விரயமாவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

---

# காங்கிரஸ் அரசின் செயலற்ற தன்மை ஹஸ்ரத்பால் விடயத்தில் நிரூபணம்

## எல்.கே. அத்வானி குற்றச்சாட்டு

(டில்லி)

சிறீநகரில்ஹஸ்ரத்பால்தர்க்கா மசூதியினுள் அடைக்கலம் தேடியுள்ள தீவிரவாதிகளைக் கையாளும் விடயத்தில் வெளியாரின் குறுக்கீடுகள் எதற்கும் இடமளிக்கப்படக் கூடாது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

புதுடில்லியில் ஞாயிறன்று நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்றும், இதனைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் காங்கிரஸ் அரசாங்கம் தனது செயலற்ற தன்மையை நிரூபித்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை ஹஸ்ரத்பாலில் இருக்கும் தீவிரவாதிகளை வெளியே கொண்டுவரும் முயற்சி தொடர்பான பேச்சுவாத்தைகளை ஞாயிறன்று ஜம்முகாஷ்மீர் மாநில நிர்வாகமும், தீவிரவாதிகளும் நடத்தினர். சுமார் 45 நிமிட நேரம் இப் பேச்சுவார்த்தை நீடித்தபோதும் இது பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. எனினும் வைத்திய அதிகாரி ஒருவர் மீண்டும் சென்று வைத்திய சிகிச்சைகள் வழங்கியதாகவும் அறிவிக்கப் பட்டது.

# யெல்ட்சினின் பிராந்தியம் தனிக்குடியரசாக பிரகடனம்

(மாஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினின் சொந்தப்பிராந்தியம் கடந்த ஞாயிறு முதல் தனிக் குடியரசாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது. ரஷ்ய தேசியவானொலி மற்றும் ரஷ்யத் தொலைக் காட்சி என்பவற்றின் சேவைகள் அங்கு நிர்வாகத் தலைவரின் உத்தரவின்படி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மிகவும் சக்தி வாய்ந்த பெட்லோஜ் பிராந்தியம் கடந்த ஞாயிறு முதல் யூரல் குடியரசாக தன்னைப் பிரகடனம் செய்து கொண்டிருப்பது ரஷ்ய அதிபருக்கு பெருத்த பின்னடைவாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

# கறுப்பினப் பெண்மணி கனடா தேர்தலில் வெற்றி

(ரொரான்டோ)

கனேடிய தேர்தலில் முதல் தடவையாக கறுப்பினப்பெண்மணி ஒருவரும் இரு சீக்கியர்களும் ஒரு சிலி வாசியும் வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இத்தேர்தலில் சீன, ஜப்பானிய பிலிப்பைன்ஸ்குரோசியஸ் ஆர்மீனிய இனத்தவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

54 பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். 1988 ஆம் ஆண்டு இருந்ததை விட 16 பெண்கள் பாராளுமன்றத்திற்கு அதிகமாக தெரிவாகியுள்ளனர்.

ஜின் அகஸ்டைறன் என்னும் 56 வயது கறுப்புப் பெண்ணே பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார். இவர் கனடாவில் குடியேறிய புதிதில் கழிவறை சுத்திகரிப்பு வேலையிலும் வீட்டுப் பணிப்பெண்ணாகவும் இருந்துள்ளார்.

# பெருமழிவுதரும் ஆயுதங்கள் ஈராக்கிடம் இல்லை

## ஐ. நா. நிபுணர்கள்குழு தெரிவிப்பு

(பக்தாத்)

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கண்காணிப்புக்குழு ஈராக்கில் நடத்திய பல்வேறு தேடுதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதம் எதுவும் தற்போது ஈராக்கிடம் இல்லை என்று தெரிவித்துள்ளது.

அறுபது நிபுணர்களைக் கொண்ட இக் கண்காணிப்புக் குழு கடந்த இரண்டு மாதங்களாக ஈராக்கின் பல்வேறு பகுதிகளிலும் நடத்திய பல தேடுதல் நடவடிக்கைகளையும் தொடர்ந்து பாரெயினில் செய்தியாளர்கள் மத்தியில் பசேிய இக் குழுவின் தலைவர் கூறுகையில், ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டதாக அல்லது சேகரித்து வைக்கப்பட்டதாக கூறப்பட்ட பல்வேறு இடங்களிலும் சோதனைகள் நடத்தப்பட்டது. ஆனால் பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் எவையும் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த ஆய்வுகளின் முடிவுகள் விரைவில் ஐ. நா. பாதுகாப்பு சபையில் தாக்கல் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மூன்று வருடங்களாக நீடிக்கும் ஈராக் மீதான வர்த்தகத் தடை நடவடிக்கையை நீக்குவது பற்றி ஐ நா. பாதுகாப்பு சபை ஆராயக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

---

### அச்சுறுத்தல் மட்டுமல்ல

(சென்னை)

மாநில அரசு தனக்கு வழங்கும் பாதுகாப்பை ஏற்றுக் கொள்வதன்மூலம் தன் உயிருக்கு அச்சுறுத்தல் என்பது அதன் அர்த்தமல்ல. ஏனைய கட்சித் தலைவர்கள் நண்பர்கள் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க எனக் களிக்கப்படும் பாதுகாப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவனாக உள்ளேன் என்று மு. கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

### கறுப்பர் விடுதலை

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

கடந்த வருடம் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெற்ற கலவரங்களின் போது லொறி சாரதியான ரெஜினோல்ரெனி என்பவரை தாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்ட இருவரில் ஒருவர் விடுதலை செய்யப் பட்டார்.

---

# இந்தியாவின் ஒரு பகுதியே காஷ்மீர் மாநிலமாகும்

## பி.வி. நரசிம்மராவ் வலியுறுத்து

[டில்லி]

காஷ்மீர் மாநிலம் இந்தியாவுடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதியே ஆகும். என்று இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நேற்று முன்தினம் புதுடில்லியில் பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே என்பதில் எவரும் ஐயம் கொள்ளத் தேவையே இல்லை என்றும் புவியின் எந்தவொரு சக்தியும் இந்தியாவிலிருந்து காஷ்மீரைப் பிரிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அயல்நாடொன்று தீவிரவாதிகளுக்கு உதவுவதன் மூலம் இந்தியாவின் சமாதான சூழ்நிலையைக் குலைப்பதாகவும் சுட்டிக்காட்டினார். மதம், ஜாதி அடிப்படையில் நாட்டை பிளவுபடுத்த முனையும் சக்திகள் குறித்து விழிப்புணர்வுடன் செயற்படுமாறு அவர் நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

அயோத்தியா குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னால் மசூதியும், ராமர் ஆலயமும் மீண்டும் கட்டப்படும் என்றும் அவர் இக் கூட்டத்தில் உறுதி அளித்தார்.

## சிறிலங்கா கடற்படை கொன்ற

# மீனவர் குடும்பங்களுக்கு தமிழக முதல்வர் நிதியுதவி

[சென்னை]

சிறிலங்கா கடற்படையால் கொல்லப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து தலா பத்தாயிரம் ரூபா வழங்கும்படி முதலமைச்சர் ஜெயலலிதா பணிப்புரை விடுத்துள்ளார்.

1990 செப்டம்பர் மாதத்தில் இவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து படகுகள் மூலம் மீன் பிடிக்கச் சென்ற போது சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரின் சுய நிர்ணய உரிமை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்

## - பாகிஸ்தான் கோரிக்கை

[இஸ்லாமாபாத்]

இந்தியாவுடன் யுத்தம் புரிய வேண்டுமென்ற இஸ்லாமியத் தீவிர வாதிகளின் கோரிக்கையை பாகிஸ்தான் அரசு நிராகரித்து விட்டதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பாரூக்லெகாரி தெரிவித்துள்ளார்

அவர் மேலும் கூறுகையில் சர்ச்சைக்குரிய காஷ்மீர் மாநில விவகாரம் பற்றி இந்தியாவுடன், பேசுவதற்கான வழி வகைகளை ஆராய பாகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

காஷ்மீரில் இந்தியப் படையினரின் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் இஸ்லாமியரின் வணக்கத் தலம் பற்றிய பாகிஸ்தான் சட்டப் பேரவையில் நடைபெற்ற நான்குநாள் விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில் இந்தியாவின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீர் மாநிலத்தில் வாழும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி இந்தியாவிடம் கோரிக்கை விட இருப்பதாகவும் தெரிவித்தார்.

---

**நம் நாடு உயர்வாகும் நாடெல்லாம் பயிர் செய்தால்**

ஈழநாதம்

# கொழும்பு துறைமுகத்தில் கப்பலில் திருடுவோர் கைது

[கொழும்பு]

கொழும்பு துறைமுகத்திற்கு வெளியில் கப்பல்களில் இருந்து பொருள்களை கொள்ளையடிக்கும் நபர்களை வளைத்துப் பிடிக்க கொழும்பு துறைமுகப் பொலிசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனராம்.

கப்பல் சிப்பந்திகளுக்கு தெரியாமல்தான் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுகின்றனவாம். கடந்த இருவாரங்களாக இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட 11 பேர் வரை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி இரவில் இவ்வாறு ஒரு கப்பலில் இருந்து பெருந்தொகையான துணிமணிகளையும், ரீசேட்டுக்களையும் திருடியுள்ளனர். இவர்களை பொலிசார் கைது செய்துள்ளனர். எனவும் கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# ஹெலி தாக்குதல்

கிளாலி பகுதியில் ஹெலிகப்டர் ஒன்று நேற்று மாலை 5-30 மணியிலிருந்து பத்து நிமிடங்கள் கலிபர் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலால் வான் ஒன்று சிறிது சேதத்திற்கு உள்ளாகியது பாரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை. [86]

# கனிஷ்ட தொழில் நுட்ப பாடவினாத்தாள் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித்திணைக்கள பரீட்சைசபையினால்நடாத்தப்படும் ஆண்டிறுதிப் பரீட்சையில் ஆண்டு 9 கனிஷ்ட தொழில் நுட்ப பாடநெறி வினாத்தாள்கள் பாடப்பிரிவு ரீதியாக அமைக்கப்படுகின்றன.

எனவே இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களில் வணிகம், தொழில நுட்பத்திறன், மனையியல், விவசாயம் ஆகிய 4 பிரிவுகளிலும் ஒவ்வொரு பிரிவிலும் எவ்வளவு மாணவர்கள்தோற்றுகின்றனர் என்பதை உடன் அனுப்பி வைக்குமாறு யாழ். கல்வித்திணைக்கள தொழில் நுட்பப் பிரிவு பாடசாலைகளைகேட்டுக்கொண்டுள்ளது.

இவ் எண்ணிக்கை அடிப்படையிலேயே வினாத்தாள்கள் வினியோகிக்கப்படவுள்ளன என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. [பா]

# தொண்டர் பயிலுனர் ஆசிரியர் சங்கம் கலைக்கப்பட்டது

தொண்டர் பயிலுனர் ஆசிரியர் சங்கம் சடந்த 30 ம்திகதி சனிக்கிழமை நடத்தி பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி தொண்டர் பயிலுனர் ஆசிரியர் சங்கம் கலைக்கப்பட்டுள்ளது. சங்கத்திடமுள்ள நிதியினை புதிய தொண்டர் ஆசிரியர் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது. தொண்டர் பயிலுனர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் சேர்ந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

# வெளிவாரி மாணவருக்கு உள்வாரியாக பயில ஒழுங்கு

பேராதனை, சிறிஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் வெளிவாரி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிகளை பின்பற்றும் மாணவர்களுக்கு வருடத்தில் இருந்து உள்வாரி மாணவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக

# தொழிற்பயிற்சி திட்டம்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தில் ஏற்கனவே வாழ்க்கைத்திறன் பயிற்சி பெற்றவர்களுக்கான தொழிற் பயிற்சித் திட்டம் எதிர்வரும் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது

இதில் பங்குபற்றுபவர்களுக்கான அறிவுறுத்தல்கடிதம் ஏற்சனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே தம்மை பதிவு செய்த அதிபர் ஆசிரியர்கள்பங்குபற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

# பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

1994ஆம் ஆண்டுவாழ்க்கைத்திறன் கல்வியைபுதிதாக ஆரம்பிக்கவுள்ள பாடசாலைஆசிரியர்களுக்கும் இது தொடர்பாக முகாமைத்துவப் பயிற்சியை பெறாத அதிபர்களுக்குமான பயிற்சி வகுப்பு யாழ் தேவரையாளி இந்துக்கல்லூரியில் எதிர்வரும் 5 ஆம்திகதி தொடக்கம் 9 ஆம்திகதிவரை நடைபெறவுள்ளது,

இந் நிலையம் வடமராட்சியைச் சேர்ந்த அதிபர் ஆசிரியர்களுக்கானதாகும் வலிகாமம் தென்மராட்சி, தீவுப்பகுதியைச் சேர்ந்த அதிபர்,ஆசிரியர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# 'காத்தவராயன்' மேடையேறும்

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய 'வைர விழா'வை முன்னிட்டு மாணவர்களால் நடிக்கப்படும் 'காத்தவராயன்' என்னும் நாட்டுக்கூத்து நாடகம் விரைவில் மேடையேற்றப்படவுள்ளது

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியரும் நடிகர்திலகமுமான திரு செ, குணபாலசிங்கம் அவர்கள் இந்நாடகத்தை நெறிப்படுத்தியுள்ளார்

# இன்று ஆரம்பம்

# நவம்பர் 7 இல் சமயப் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையினரால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டுவரும் சைவ சமய பாடப் பரீட்சை இவ்வாண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தவறாது நடைபெறுமென பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் திரு வ. கந்தசாமி அவர்கள்தெரிவித்துள்ளார்கள்

இப்பரீட்சை நவம்பர் மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறுமென சில பத்திரிகைகளில் வெளிவந்தது தவறானது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# வருடாந்த பொதுக்கூட்டம்

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட கிளை வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 7-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10-00மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## வீதிப்போக்கு

பக்கமாகவும் ஒருவருடன் ஒருவர் கைகோர்த்தபடியும் செல்வதால் பல விபத்துகளை சந்திக்க வேண்டியுள்ளது. பலர் காயப்பட்டு மருத்துவமனை செல்கின்றனர். ஒரு சிலர் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு காயமடையவும் நேரிடுகிறது. இவ் விபத்துகளால் எமதுமக்கள் காயப்படுவது மட்டுமன்றி அவர்களின் வாழ்வின் செயற்பாடுகளும் பாதிப்படைகிறது என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும் இவ்வாறு காயப்படுவதையோ வாழ்க்கைநிலை பாதிக்கப்படுவதையோ அனுமதிக்க முடியாது. எனவே விபத்துகளை தவிர்க்கும் வகையில்எமதுபோக்குவரத்து விதிகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டில்

பதிவினைப் பதிந்து குடும்பப் பதிவு அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறிவிக்கின்றனர்.

வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்ப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் (யாழ் மத்திய பஸ் நிலையத்திற்குமுன்) அத்தியடியில் அமைந்துள்ள குடும்பப் பதிவு அட்டை செயலகத்திலும்,

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் கோண்டாவில் புகையிரத

# கோபாலசாமிக்கு தி. மு. க. தலைமை சிவராசன் குறிப்பிட்டாராம்

## ராஜீவ் கொலை வழக்கில் தெரிவிப்பு

[சென்னை]

சென்னை பூந்தமல்லி சிறையில் நேற்று நடைபெற்ற ராஜீவ் காந்தி கொலை வழக்கில் வை கோபாலசாமியின் பெயரும் அடிபட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச தரப்பு வழக்கறிஞர் வழக்கில்குற்றம்சாட்டப்பட்ட சிவராசன் தி. மு. கவின் தலைமைப் பொறுப்பை வை. கோபாலசாமி ஏற்பதற்கான பேச்சுகளை நடத்தியதாக நேற்று திடீரென குறிப்பிட்டார். சிவராசனுக்கும் புலிகள் ஆதரவாளர் என்று கூறப்படும் சீனிவாச ஐயா என்பவருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் மூலங்களை அரசதரப்பு வழக்கறிஞர் வெளியிட்டார்.

அதில் திமுக தலைமையை கருணாநிதியிடமிருந்து விரைவில் கோபாலசாமி எடுத்துக் கொள்வார் என்று குறிப்பிடப் பட்டுள்ளதாக அரச தரப்பு வழக்கறிஞர் கூறினார். கோபாலசாமி குறித்து எதிரி தரப்பு வழக்கறிஞர் எழுப்பிய வினா ஒன்றிற்கு விடையாகவே இத்தகவலை அரசதரப்பு வழக்கறிஞர் வெளியிட்டார்.

அரச தரப்பினர் சீனிவாச ஐயா என்று கூறுபவரை நீதிமன்று அழைத்து வராதது ஏன்? அவர் யார் அவரின் அடையாள விபரம் என்ன என எதிர் தரப்பு வழக்கறிஞர் கோரினார்.

சீனிவாசஐயாவை சென்னை புறநகரில் ஜெயக்குமார் என்பவரது வீட்டில் வைத்து சிவராசன் 45 நிமிடங்கள் சந்தித்து பேசியதாக அரசதரப்பு வழக்கறிஞர் தனது பதிலில் குறிப்பிட்டார்.

நீதிபதி சித்திக் நவம்பர் 15ஆம் திகதி கைதானவர்கள் மீது என்ன என்ன குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன எனும் விபரங்களை தாக்கல் செய்வார்.

இக்கொலை வழக்கில் கைதான முருகன் நீதிமன்ற அழைப்பை நிராகரித்துவிட்டார் இந்த வழக்கின் போக்கிலும் விசாரணையிலும் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் நீதிமன்றம் எத்தீர்ப்பை அளித்தாலும் ஏற்கத்தயார் என்றும் கூறியுள்ளார்.

# போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாத் தொடர்பாக நடைபெறும் போட்டிகளில் ஆசிரியர்களுக்கான மேசைப் பந்துச் சுற்றுப் போட்டி சுண்டிக்குளி வை. எம் சி ஏ உள்ளரங்கிலும், மாணவர்களுக்கான மாவட்ட இறுதி நிலைச் சதுரங்கச் சுற்றுப் போட்டி யாழ்,இந்துக் கல்லூரியிலும் நாளை வியாழக் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

## பிரச்சினையை

ஜனாதிபதி இன்று வடக்கு கிழக்கில் உள்ளது பயங்கரவாத பிரச்சினை என கூறிஒரு தேசிய பிரச்சினையை மழுங்கடிக்க பார்க்கின்றார். இதன்

# பாடசாலைக்கிடையேயான உதைபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 15 வயது பிரிவில் இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில், யாழ். அருணோதயாக் கல்லூரியை எதிர்த்து ஏழாலை மகா வித்தியாலயமும் புனித யோசப் வித்தியாலயத்தை எதிர்த்து யூனியன் கல்லூரியும், மட்டுவில் ம. வி மைதானத்தில், யாழ் டிரிபேக் கல்லூரியை எதிர்த்து புனித ஹென்றியரசரும் இமையாணன் அ த. க. பாடசாலையை எதிர்த்து புங்குடுதீவு சண்முகானந்தாவும் மோதுகின்றன. போட்டிகள் 2-30 மணிக்கு ஆரம்பமாகும்.

# சட்டபீட மாணவர் பரீட்சை; தோற்ற முடியாத நிலை

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழக சட்டபீட மாணவர்கள் தமது இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலையில் உள்ளார்கள். அவர்களது 3ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாததால் வரும் நவம்பர் 15இல் நடைபெற இருக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதா, இல்லையா என்ற இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

சுமார் 200 மாணவர்கள் இறுதியாண்டு எல் எல் பி பரீட்சைக்கு தோற்றவுள்ளார்கள் மூன்றாம் ஆண்டுப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி ஆறு மாதங்கள் கழிந்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 01.11.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11507

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4568, 26 8878, 28-3439, 24-3906, 27-6493
41-9396, 26-5241, 27-5186, 24 7044, 27-2056
41 3329, 27 9030, 42 6452, 27 2107, 24-5496
28-0428, 26-2941, 22-5857, 42 0526, 24-4988
24-5323, 41-9366, 26 9992, 26-0711.

## 02.11.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11507

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

## தொண்டர் பயிலுனர் ஆசிரியர் சங்கம் கலைக்கப்பட்டது

தொண்டர் பயிலுனர் ஆசிரியர் சங்கம் சடந்த 30 ம்திகதி சனிக்கிழமை நடத்தி பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி தொண்டர் பயிலுனர் ஆசிரியர் சங்கம் கலைக்கப்பட்டுள்ளது. சங்கத்திடமுள்ள நிதியினை புதிய தொண்டர் ஆசிரியர் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது. தொண்டர் பயிலுனர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் சேர்ந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

## வெளிவாரி மாணவருக்கு உள்வாரியாக பயில ஒழுங்கு

பேராதனை, சிறிஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் வெளிவாரி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிகளை பின்பற்றும் மாணவர்களுக்கு பேராதனை, சிறிஜயவர்த்தனபுர ஆகிய பல்கலைக் கழகங்களில் உள்வாரி மாணவர்களாக படிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் கலை முதல் பரீட்சையில் (வெளிவாரி) முதல் அமர்வில் மொத்த திரட்டுப் புள்ளிகள் 160க்கு குறையாமலும் அல்லது 3'பீ' தரச்சித்திகள் பெற்றிருப்பின் கிடைக்கக்கூடிய இடங்களுக்கு ஏற்ப அவர்களை இரண்டாம் வருடத்தில் இருந்து உள்வாரி மாணவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இருந்து கிடைக்கும் தகவல் கூறுகின்றன.

மேலதிக விபரங்களை பெறுவதாயின் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களின் பதிவாளருடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்: பதிவாளர், பேராதனைப் பல்கலைக் கழகம் பேராதனை. பதிவாளர் சிறிஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், கங்கொடவில, நுகேகொட. (07)


யாழ். தமிழ்த்தாய் புத்தகசாலையில்

**விற்பனைக்கு வந்துவிட்டது.**

**தலைவர் பிரபாகரனின் கருத்துத் தொகுப்பு நூலான,**

**எனது மக்களின் விடுதலைக்காக...**

மேலும்,

நாக. பத்மநாதன் எழுதிய உருவகங்களின் தொகுப்பு நூலான,

**"அதிர்ச்சி நோய் எமக்கல்ல"**

இப்போது விற்பனையில் உள்ளன

**தமிழ்த்தாய் புத்தகசாலை**

181, மின்சார நிலைய வீதி.

(பழைய பஸ்நிலையம் முன்பாக)

**யாழ்ப்பாணம்.**

(சி/7831)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


வரும் 14ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## 'காத்தவராயன்' மேடையேறும்

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய 'வைர விழா'வை முன்னிட்டு மாணவர்களால் நடிக்கப்படும் 'காத்தவராயன்' என்னும் நாட்டுக்கூத்து நாடகம் விரைவில் மேடையேற்றப்படவுள்ளது

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியரும் நடிகர்திலகமுமான திரு செ, குணபாலசிங்கம் அவர்கள் இந்நாடகத்தை நெறிப்படுத்தியுள்ளார்

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப, நோ கூ சங்கம் தனது பாவனையாளருக்கு ஐப்பசி மாதத்திற்கான உலர் உணவு விநியோகத்தை இன்று அதன் சகல கிளைகளிலும் ஆரம்பிக்கவுள்ளது, (87)

## ஆறுமாத தையற் பயிற்சி

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் இன்று மாலை 3 30 மணிக்கு திருநெல்வேலியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 30 படித்த இளம் பெண்களுக்கான ஆறு மாத கால தையல் பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பயிற்சியை முடித்துக் கொள்ளும் பெண்களுக்கு சுயமாக தையல் தொழிலை நடத்துவதற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் சகல உதவிகளையும் செய்வதற்கு முன்வந்துள்ளது. இப் பயிற்சியினை திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அவர்கள் [மேலதிக அரசாங்க அதிபர்] ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

## விசேட நிகழ்வுகள்

(வடமராட்சி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினரால் தொண்டமனாறு சிறி செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3.00 மணிக்கு சைவ நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 5ஆம் திகதி 'திருப்புகழ்' 12 ஆம் திகதி ''இறை தாள் நினைவாய்'' 19 ஆம் திகதி ''சந்தர் சஷ்டி கலைத்தொடர்நிகழ்ச்சி'' 26 ஆம் திகதி ''கிளவியும் குழவியும்'' ஆகிய விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன. [யோ]

கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### வெளிநாட்டில்

பதிவினைப் பதிந்து குடும்பப் பதிவு அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் அறிவிக்கின்றனர்.

வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்ப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் (யாழ் மத்திய பஸ் நிலையத்திற்குமுன்) அத்தியடியில் அமைந்துள்ள குடும்பப் பதிவு அட்டை செயலகத்திலும்,

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள குடும்பப் பதிவு அட்டை செயலகத்திலும்,

சாவகச்சேரி, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி அக்சர அனுமதி வழங்கும் காரியாலயததில் அமைந்துள்ள குடும்பப் பதிவு அட்டை செயலகத்திலும்,

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் மாலுசந்தியில் அமைந்துள்ள குடும்பப்பதிவு அட்டை செயலகத்திலும் குடும்ப அட்டை சம்பந்தமான பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான விண்ணப்பப்படிவ விற்பனை நிலையங்களிலும், குடும்பப் பதிவு அட்டை செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு குடும்பப் பதிவு அட்டைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### பருத்தித்துறை

டது.

கப்பலில் குடிநீர் தீர்ந்து விட்டதையடுத்து திருக்கோணமலைக்குச் செல்ல இருந்த இக் கப்பலில் இருந்து பொருள்களை துரிதமாக இறக்குவதற்கு எடுத்த ஏற்பாட்டையடுத்தே குடிநீர் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (யோ)

### பொலிஸ்

இருக்க வேண்டிய நிலையில் நான்காண்டு சேவை செய்தவர்களும் இப்பதவி உயர்வை பெறறுள்ளார்கள் என பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அண்மையில் புதிதாக 30 பொலிஸ் அத்தியட்சகர்களும் 36 உதவி பொலிஸ் அத்தியட்சகர்களும் பதவி உயர்வு பெற்றிருந்தனர்.

தித்து பேசியதாக அரசதரப்பு

## போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாத் தொடர்பாக நடைபெறும் போட்டிகளில் ஆசிரியர்களுக்கான மேசைப் பந்துச் சுற்றுப் போட்டி சுண்டிக்குளி வை. எம் சி ஏ உள்ளரங்கிலும், மாணவர்களுக்கான மாவட்ட இறுதி நிலைச் சதுரங்கச் சுற்றுப் போட்டி யாழ், இந்துக் கல்லூரியிலும் நாளை வியாழக் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

### பிரச்சினையை

ஜனாதிபதி இன்று வடக்கு கிழக்கில் உள்ளது பயங்கரவாத பிரச்சினை என கூறிஒரு தேசிய பிரச்சினையை மழுங்கடிக்க பார்க்கின்றார். இதன் மூலம் ஜனாதிபதி தமிழ்க்கட்சிகள், மற்றும் கொழும்பு தமிழ் குழுக்களின் ஆதரவையும் இழந்துள்ளதுடன், வடக்கு கிழக்கு மக்களின் உரிமைகளையும் பறிக்கப்பார்க்கின்றார் இதன் மூலம் தமிழ் சமுதாயத்தையே சிங்கள மக்களின் எதிரியாக்க முற்படுகின்றார் இதற்கு ஜனாதிபதியின் மூர்க்கத்தனமும், மந்த புத்தியுமே காரணமாக அமைந்துள்ளது தேசிய பிரச்சினைக்கு தீர்வு கண்டால் 'பயங்கரவாதம்' இல்லாமல் போய்விடும் இதற்கு மாறாக 'பயங்கர வாதத்தை' மட்டும் ஒழிக்க முற்பட்டால் அது மேலும் வளரும் தேசிய பிரச்சினை அப்படியே இருக்கும்

அடுத்து யுத்தம்நடைபெற்று கொண்டு இருக்கும் போது ஜனாதிபது யுத்த நிலைகள் தொடர்பாக பாதகமான செய்திகளை வெளியிடுவதன் மூலம் யுத்தத்தில் இருக்கும் இராணுவத்தினரின் மனோநிலை சோர்வடையும் எனவே யுத்தம் நடைபெறும் போது அரசாங்கம் இராணுவத்தினரை ஊக்குவிக்க வேண்டும். ஆசிகள் வழங்க வேண்டும், இதனை விட்டு விட்டு இராணுவத்தினருக்கு மனச்சோர்வுஏற்படும் விதத்தில் நடக்கக்கூடாது,

யுத்தம் நடைபெற்றுக் கொண்டுஇருக்கும்போதுஜனாதிபதி இராணுவ முக்கியஸ்தர்களை அழைத்து யுத்தத்தை தொடர்ந்து நடத்துங்கள் இல்லாவிட்டால் விட்டு வெளியேறுங்கள் நான் வேறு ஆட்களைக் கொண்டு யுத்தம் செய்கின்றேன் என கூறியுள்ளார்.

இதனால் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினர் மிகவும் மனப்பாதிப்பு அடைந்துள்ளனர்.

ஓய்வுபெற்று சேவை நீடிப்பில் இருப்பவர்களை தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன் இதனை ஜனாதிபதி செய்துள்ளார் என்றார்.

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 01.11.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11507

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4568, 26 8878, 28-3439, 24-3906, 27-6493 41-9396, 26-5241, 27-5186, 24 7044, 27-2056 41 3329, 27 9030, 42 6452, 27 2107, 24-5496 28-0428, 26-2941, 22-5857, 42 0526, 24-4988 24-5323, 41-9366, 26 9992, 26-0711.

### 02.11.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11507

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40 6979, 24-8619, 26-0736.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா - அன்னம்

காலம்சென்ற கந்தையாவின் மனைவியும், தர்மலிங்கம் (இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் பூநகரி பிரதேச செயலகம்), நற்குணம் (குணம் எலக்றிக்கல்ஸ் கிளிநொச்சி), செல்வரட்ணம் (வி. கே. எஸ் பற்றரி எலக்றிக்கல்ஸ் வேக்ஸ்-நெல்லியடி), சிவராசா (நிமலன்ஸ் எலக்றிக்கல்ஸ் - கிளிநொச்சி), இராசமணி, மகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் தாயாரும், காலம் சென்ற கந்தையா, தளையசிங்கம் (முன்னாள் இ போ. ச. ஊழியர்), பரராஜசிங்கம் [கொக்குவில்-இந்துக் கல்லூரி], கனகேஸ்வரி, நவரத்தினம். ரதி, சந்திராவதி ஆகியோரின் மாமியாருமாகிய திருமதி கந்தையா - அன்னம் அவர்கள் 02-11 93 இல் காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 03-11-93 புதன்கிழமை காலை 10 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

''அன்னை இல்லம்'' — மக்கள் - மருமக்கள் —

24/2, பாரதி வீதி,

கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். [6467]

### சோமகலாவல்லி சண்முகலிங்கம்

(போஷகர்இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை)

டாக்டர் சோ. சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி (2-11-93) நேற்று காலமானார் அன்னார் கொடிகாமம் காலஞ்சென்ற திரு திருமதி பேரம்பலம் செல்லையா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற திரு.செ சோமசேகரம். திருமதி ராசம்மா சோமசேகரம் அவர்களின் மருமகளும் சோமேஸ்விக்னராஜ், நாகநந்தினி, செல்வலெட்சுமி ஆகியோரின்அன்புதாயாருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

180A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். Rtn Dr. சோ. சண்முகலிங்கம்

(சி/7832)